பக்கங்கள் : பன்னிரண்டு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 10.00

சுடர் 23 வள்ளுவர் ஆண்டு 2039 வைகாசி 25 சனிக்கிழமை (07.06.2008)UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 193

# பஸ் மீது கிளைமோர் தாக்குதல்!

# 21 பயணிகள் பலி; 70 பேர் காயம்!!

## நேற்றுக்காலை கட்டுபெத்தவில் பயங்கரம்

கொழும்பு, ஜூன் 07

**மொறட்டுவ, கட்டுப்பெத்த பகுதியில் நேற்றுக்காலை 7.45 மணி அளவில் பயணிகள் பஸ்ஸை இலக்குவைத்து நடத்தப்பட்ட கிளைமோர்த் தாக்குதலில் 21 பேர் கொல்லப் பட்டனர்; 70 இற்கும் அதிகமானவர்கள் காயமடைந்தனர். கொட்டாவவிலிருந்து பெரும் எண்ணிக்கையான பயணிகளுடன் கல் கிஸை நோக்கிப் பயணித்துக்கொண்டிருந்த பஸ்ஸே கிளை மோர்த்தாக்குதலுக்கு உள்ளானது; இக் கோரச் சம்பவம் நடந்திருக்கிறது**

கட்டுப்பெத்த பகுதியில் சைலபம்மராமய பௌத்த விகாரைக்கும் மொறட்டுவ பல்கலைக்கழகத்திற்கும் இடையில் வீதியின் அருகே உள்ள சதுப்பு நிலப் பகுதியில் பற்றை ஒன்றுக்குள் இந்தக் கிளைமோர் மறைத்து வைக்கப்பட்டிருந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

தொலைவிலிருந்து இயக்கப்படும் கருவி மூலம் இந்தக் கிளைமோர் வெடிக்க வைக்கப்பட்டதாக குண்டு செயலிழக்கும் பிரிவைச் சேர்ந்த அதிகாரிகள் தெரிவித்தனர்.

இந்தத் தாக்குதலில் கொல்லப்பட்ட 21 பேரில் 8 பேர் பெண்கள் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, காயமடைந்த 70 இற்கும்

(12 ஆம் பக்கம் பார்க்க)



பஸ்ஸில் இருந்து சடலங்கள் மீட்கப்படுவதையும், தாக்குதலுக்கு இலக்கான பஸ்ஸையும் படங்களில் காணலாம்

## கரையோரப் பகுதிகளில் 'கிபிர்' விமானங்கள் நேற்றிரவு வட்டமிட்டன

யாழ்ப்பாணம், ஜூன் 7

யாழ்.நகரை அண்டிய கரையோரப் பகுதிகளில் நேற்று நள்ளிரவுக்கு சற்று முன்னதாக ஷெல்கள் வீழ்ந்து வெடித்த தாக

(12 ஆம் பக்கம் பார்க்க)

## கல்கிஸைப் பகுதியில் கிளைமோர்கள் மீட்பு

கொழும்பு, ஜூன் 07

கல்கிஸை வட்டரப்பொல வீதியிலும் அதற்கு சற்று அருகில் உள்ள வீதியிலும் இருந்து சுமார் 5 கிலோ நிறையுடைய இரு

(12 ஆம்பக்கம் பார்க்க)

# கண்டியிலும் நேற்றுக் குண்டு வெடிப்பு 2 பஸ் பயணிகள் பலி; 20 பேர் காயம்

## சந்தேக நபர் ஒருவர் பொதுமக்களினால் பொலிஸாரிடம் ஒப்படைப்பு

கொழும்பு, ஜூன் 07

கண்டி மாவட்டம், பொல்கொல்ல பகுதியில் நேற்று பஸ்ஸுக்குள் இடம்பெற்ற குண்டு வெடிப்பில் 2 பேர் கொல்லப்பட்டனர்; 20 பேர் காயம் அடைந்தனர். பிற்பகல் 3.50 மணியளவில் இச்சம்பவம் இடம்பெற்றது.

வத்தேகமவிலிருந்து கண்டி நோக்கிச் சென்று கொண்டிருந்த தனியார் பஸ் ஒன்றே இந்த அனர்த்தத்தில் சிக்கியது. பொல்கொல்ல கல்வியியல் பீடத்திற்கு அருகிலேயே இச் சம்பவம் இடம்பெற்றது.

சம்பவத்தில் காயமடைந்தவர்கள் கண்டி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

பிரஸ்தாப பஸ்ஸில் சம்பவ நேரம் 25 பேர் பயணம் செய்தனர் என்றும் காயமடைந்தவர்கள் அனைவரும் ஆண்களே என்றும் தெரிவிக்கப்படுகிறது.

இந்தச் சம்பவத்தின் பின்னர், சந்தே

(12 ஆம் பக்கம் பார்க்க)

# ஊரடங்கு பிறப்பிக்கப்பட்டு தேடுதல்; நாய்களும் நஞ்சூட்டப்பட்டு இறந்து காணப்பட்டன

கொழும்பு, ஜூன் 7

மொறட்டுவ, கட்டுப்பெத்தவில் இடம் பெற்ற கிளைமோர் தாக்குதலை அடுத்து ஊரடங்கு பிறப்பிக்கப்பட்டு அப்பகுதியில் பெரும் எடுப்பில் தேடுதல்-நடத்தப்பட்டது. தேடுதலில் 38 பேர் கைது செய்யப்பட்டனர். தேடுதலின் போது 7 நாய்கள் நஞ்சூட்டப்பட்டு இறந்து கிடந்தமையும் தெரியவந்தது.

மொறட்டுவ பல்கலைக்கழகம் மற்றும் தமிழர்களின் வீடுகள் சோதனையிடப்பட்டன.

மாலை 6மணிக்கு ஊரடங்கு நீக்கப்பட்டது.

கிளைமோர்த் தாக்குதலில் காயமடைந்த அனைவரும் மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்ட பின்னர் உடனடியாக ஊரடங்கு அமுல்படுத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

ஊரடங்கு நடைமுறைப்படுத்தப்பட்டதை அடுத்து அப்பகுதிக்கு மேலதிக இரா

(12 ஆம் பக்கம் பார்க்க)

வெள்ளவத்தை, தெகிவளை உட்பட

# தமிழர்கள் செறிந்து வாழும் பகுதிகளில் நேற்று பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டது

கொழும்பு,ஜூன் 7

கொழும்பு தலைநகரில் தமிழ் மக்கள் செறிந்து வழும் பகுதிகளில் பாதுகாப்பு நேற்று மாலைக்குப்பின் பலப்படுத்தப்பட்டிருந்தது

வெள்ளவத்தை, தெகிவளை, பம்பலப்பிட்டி உட்பட கொட்டாஞ்சேனை, ஜிந்துப்பிட்டி மற்றும் தமிழர்கள் செறிந்து வாழும் பகுதிகளில் இராணுவத்தினரும், பொலிஸாரும் குவிக்கப்பட்டிருந்தனர்.

வன்செயல்கள் எதுவும் இடம்பெறலாம்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## யாழ்.மாவட்ட நீதிபதியாக அரியநாயகம் நியமனம்

யாழ்ப்பாணம், ஜூன் 7

பருத்தித்துறை மாவட்ட நீதிபதியாக பணியாற்றிய க.அரியநாயகம் யாழ்.மாவட்ட நீதிபதியாக நீதிச்சேவை ஆணைக்குழுவால் நியமிக்கப்பட்டுள்ளார்.

இது தொடர்பான நியமனக் கடிதம் நீதிச் சேவை ஆணைக்குழுவிடமிருந்து நேற்று

(12 ஆம் பக்கம் பார்க்க)

# இனக் கலவரத்தைத் தூண்டும் புலிகளின் முயற்சி கிளைமோர்த் தாக்குதலுக்கு ஜனாதிபதி கடும் கண்டனம்

கொழும்பு, ஜூன் 7

மொறட்டுவ, கட்டுப்பெத்தப் பகுதியில் நேற்று இடம்பெற்ற கிளைமோர்த் தாக்கு தலை வன்மையாகக் கண்டித்துள்ளார் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ. தமிழ் மக்களுக்கு எதிராக இனக்கலவரத்தைத் தூண்டிவிடும் விடுதலைப் புலிகளின் முயற்சி இது என அவர் தெரிவித்துள்ளார்.

பொதுமக்களைப் பொறுமையாக இருக்கும்படியும், இன வன்முறை மற்றும் வெறுப்புணர்வைத் தூண்டும் முயற்சிகளுக்குப் பலியாக வேண்டாமெனவும் ஜனாதிபதி கேட்டுக் கொண்டுள்ளார்.

நேற்றைய தாக்குதல் சம்பவம் தொடர்பாக ஜனாதிபதி மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு:-

கட்டுப்பெத்தவில் இடம்பெற்ற குண்டு வெடிப்பு, விடுதலைப் புலிகளின் கொடூரத் தன்மையையும் மனித உயிருக்கு மதிப்பு வழங்காததையும் வெளிப்படுத்துகின்றன.

இச்சம்பவத்தில் கொல்லப்பட்ட அனைவருக்கும் எனது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கிழக்கை இழந்தமை மற்றும் வடக்கில் ஏற்பட்டுள்ள பின்னடைவுகள் ஆகியவற்றால் விடுதலைப் புலிகள் பீதியடைந்தி

(12 ஆம் பக்கம் பார்க்க)

## சரஸ்வதி வித்தியாலய நூற்றாண்டு விழா நிகழ்வு

யாழ்ப்பாணம், ஜூன் 7

மட்டுவில் தெற்கு சரஸ்வதி வித்தியாலய நூற்றாண்டு விழாவும் வித்தியாலய பரிசில் நாளும் இன்று காலை 9 மணிக்கு வித்தியாலய மகாலிங்கம் அரங்கில் நடைபெறும்.

வித்தியாலய அதிபர் வ.நடராஜா தலைமையில் நடைபெறவுள்ள இந் நிகழ்வுக்குப்

(12 ஆம் பக்கம் பார்க்க)

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விமல் பேச எழுந்தபோது சபையில் கூச்சல், குழப்பம்!

கொழும்பு, ஜூன் 7

கட்டுப்பெத்தவில் இடம்பெற்ற பஸ் மீதான கிளைமோர்த் தாக்குதல் சம்பவம் தொடர்பாக விமல் வீரவன்ஸ நேற்று நாடாளுமன்றில் உரையாற்ற முற்பட்டபோது, ஐ.தே.கவினர் கடும் எதிர்ப்புத் தெரிவித்தனர். நீண்ட நாள்களுக்குப் பின்பு நேற்றுக்காலை நாடாளுமன்றத்துக்கு வந்திருந்தார் விமல் வீரவன்ஸ.

ஜே.வி.பி. நாடாளுமன்றக் குழுத் தலைவராக இருந்தபோது எப்படி அடிக்கடி எழுந்து பேசினாரோ அதேபோன்று நேற்றும் பேசமுற்பட்டார்.

அவர் எழுந்து பேச முற்பட்டதும் ஐ.தே.கட்சி எம்.பிக்கள் லக்ஷ்மன் செனவிரட்ன, ரவி கருணாநாயக்க மற்றும் தயாசிறி ஜயசேகர ஆகியோர் எழுந்து நின்று அவரைப் பேசவிடாது சத்தமிட்டனர்.

தற்போது சாதாரண எம்.பியாக உள்ள விமல் எந்த நிலையியல் கட்டளையின் கீழ் இவ்வாறு எழுந்து சபாநாயகரின் அனுமதியில்லாமல் பேசுகிறார் என்று அவர்கள் கேள்வி எழுப்பினர்.

விமல் ஒழுங்குப் பிரச்சினை என்று கூறிக்கொண்டுதான் பேச எழுந்தார். அதனால்தான் நான் பார்த்துக் கொண்டிருந்தேன். இருந்தாலும் அவர் பேச முற்படுவது தேசிய முக்கியத்துவம்

வாய்ந்த ஒரு பிரச்சினை - என்று சபாநாயகர் கூறினார்.

அப்படியாயின் நாங்களும் இப்படி அனுமதியில்லாமல் உரையாற்ற முடியுமா என்று ஐ.தே.கட்சியினர் கேள்வி எழுப்பினார்.

அப்பொழுது விமல் சார்பு ஜே.வி.பி. எம்.பிக்களுக்கும் ஐ.தே. கட்சியினருக்குமிடையில் கடும் வாக்குவாதம் இடம்பெற்றது. சோமவன்ஸ சார்பு ஜே.வி.பி. எம்.பிக்கள் அமைதியாக இருந்தனர்.

இருந்தபோதிலும் சோமவன்ஸ சார்பு ஜே.வி.பி. எம்.பியான நிஹால் கலபதி விமல் மீது கடுமையாகப் பாய்ந்தார்.

இத்தனைக்கும் விமல் ஒரு வார்த்தைகூடப் பேசாது அமைதியாக நின்றுகொண்டிருந்தார். பின்பு மொரட்டுவை குண்டு வெடிப்புச் சம்பந்தமாக ஓரிரு வார்த்தைகளை மாத்திரம் பேசிவிட்டு அமர்ந்துவிட்டார். (சி)

## கண்ணீர் அஞ்சலி



எமது பணிமனையில் கிராம உத்தியோகத்தராக (நாரந்தனை தெற்கு) கடமையாற்றும் இ.ஸ்ரீஸ்கந்தராசா அவர்களின் அன்புத் தந்தை

**தம்பிப்பிள்ளை இராசரத்தினம்**

03.06.2008இல் காலமானதையிட்டு அவரின் பிரிவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

நலன்புரிச் சங்கம், உதவி அரசாங்க அதிபர் பணிமனை, தீவகம் வடக்கு, ஊர்காவற்றுறை

*உதவி அரசாங்க அதிபரும், உத்தியோகத்தர்களும்.*

## மரண அறிவித்தல்

### கைலாசபிள்ளை சோதிலிங்கம்

கைலாசபிள்ளையார் கோயிலடி, நல்லூரைப் பிறப்பிடமாகவும் ஐயனார் கோயிலடி, சண்டிலிப்பாயை வசிப்பிடமாகவும் கொண்ட கைலாசபிள்ளை சோதிலிங்கம் நேற்று (06.06.2008) வெள்ளிக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கைலாசபிள்ளை - பூரணம் தம்பதியினரின் அன்பு மகனும், கண்மணியின் அன்புக் கணவரும், கஜேந்திரன் (பிரான்ஸ்), நரேந்திரன் (பிரான்ஸ்), மால்மருகன் (பிரான்ஸ்), யசோதா (லண்டன்) ஆகியோரின் தந்தையும், மாலதி, குமுதினி, சசிதரன் ஆகியோரின் மாமனும், சிவலிங்கம், சங்கரலிங்கம், சுந்தரலிங்கம், சிவமணி ஆகியோரின் சகோதரரும், தனபாலசிங்கம், காலஞ்சென்ற குணரத்தினம், குலமணி, நவரட்ணம், இராசரத்தினம், செல்வரத்தினம், நல்லம்மா ஆகியோரின் மைத்துனரும், சுகிர்தமலர், சின்னத்தங்கம், குமாரசிங்கம், காலஞ்சென்ற இலங்கராஜா ஆகியோரின் சகலனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (08.06.2008) ஞாயிற்றுக்கிழமை மு.ப. 11 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக பிப்பிலி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

*ஐயனார் கோயிலடி, சண்டிலிப்பாய்.* (75186)

தகவல்: கண்மணி (மனைவி)

# கமநல புலமைப்பரிசில் வழங்கும் நிகழ்வு

யாழ்ப்பாணம், ஜூன் 7

யாழ்.மாவட்ட கமநல அபிவிருத்தித் திணைக்களத்தின் ஏற்பாட்டில் கமநல புலமைப்பரிசில் வழங்கும் நிகழ்வு நாளை ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு யாழ்.இந்துக்கல்லூரி குமாரசாமி மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

திணைக்களத்தின் உதவி ஆணையாளர் ம.பற்றிக் டிறஞ்சன் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் யாழ்.அரச அதிபர் கே.கணேஷ் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார்.

கமநல அபிவிருத்தித் திணைக்கள 50 ஆவது வருட நிறைவை முன்னிட்டு யாழ். மாவட்ட வறிய விவசாயிகளின் 2009 ஆண்டு உயர்தர பரீட்சைக்கு தோற்றும், தெரிவு செய்யப்பட்ட 115 பிள்ளைகளுக்கு தலா 20 ஆயிரம் ரூபா வீதம் புலமைப் பரிசில் வழங்கப்படவிருக்கின்றது. (1)

# இன்றைய ஆட்டங்கள்

குருநகர், ஜூன் 7

'தூய ஒளி' வெற்றிக்கிண்ணத்துக்காக நடத்தப்பட்டுவரும் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் இன்று இடம் பெறும் ஆட்டங்களில் மோதும் அணிகள் வருமாறு:-

* பி.ப. 3மணி பாடுமீன் 'ஏ' அணி எதிர் றோயல் வி.க. அணி
* பி.ப. 4மணி சென்.பீற்றர்ஸ் வி.க. எதிர் சென்.அன்ரனீஸ் 'ஏ' அணி. (1-51)

# பதவிநிலை வகித்து உள்ளீர்க்கப்பட்ட ஆசிரியர்களுக்கு

யாழ்ப்பாணம், ஜூன் 7

யாழ். கல்வி வலயத்தில் நிகழ்ச்சித் திட்ட உதவியாளர், திட்டமிடல் உதவியாளர், அபிவிருத்தி உதவியாளர் ஆகிய பதவிகளை வகித்து ஆசிரியர் சேவைக்கு உள்ளீர்க்கப்பட்ட ஆசிரியர்களை இன்று முற்பகல் 10மணிக்கு வலய அலுவலகத்தில் சமுகமளிக்குமாறு வலயக்கல்விப் பணிப்பாளர் திருமதி அ. வேதநாயகம் கேட்டுள்ளார்.

இடம்பெயர்ந்து தற்காலிக இணைப்பில் உள்ள ஆசிரியர்களையும் சமுகமளிக்குமாறு அவர் கேட்டுள்ளார்.

# கலை முதல் தேர்வு முடிவு வெளியாகியது

யாழ்ப்பாணம், ஜூன் 7

யாழ். பல்கலைக்கழக வெளிவாரிப்பிரிவின் கலை முதற் தேர்வு 2004/05 இல் தோற்றியவர்களில் 487 பேர் சித்தியடைந்துள்ளனர். அவர்களது பெயர் விவரங்கள் வெளியாகியுள்ளன.

இவர்கள் தமது பரீட்சை முடிவுகளை எதிர்வரும் வெள்ளிக்கிழமை பெற்றுக் கொள்ள முடியும் என்று வெளிவாரிப்பட்டப்படிப்புகள் பிரிவு பதிவாளர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை- மீள் பரீட்சைகளுக்கான விண்ணப்ப முடிவு திகதி எதிர்வரும் 30 ஆம் திகதி என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (1-203)

# குருநகருக்கு கிழக்கே மீன்பிடிக்கத் தடை

குருநகர், ஜூன் 7

யாழ்.குடாக்கடலில் குருநகர் இறங்குதுறையிலிருந்து கிழக்குப்புறமாக உள்ள கடல்நீரேரியில் மீன் பிடிப்பது மறு அறிவித்தல் வரைநேற்று முன்தினம் வியாழக்கிழமை தொடக்கம் தடை செய்யப்பட்டுள்ளதாக குருநகர் இறங்கு துறையிலுள்ள படையினர் தமக்கு அறிவித்தல் வழங்கியுள்ளதாக குருநகர் கடற்றொழிலாளர்களும் கடற்தொழிலாளர் சங்கங்களும் தெரிவித்தன.

அனுமதி பெற்று மீன்பிடிக்க குருநகர் இறங்கு துறைக்குச் சென்ற மீனவர்கள் படையினரால் நேற்றுமுன்தினம் காலை திருப்பி அனுப்பப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது. (அ-51)

## மரண அறிவித்தல்கள்

### மோசேஸ் எட்வேட்



(முன்னாள் மாநகராட்சி மன்ற உறுப்பினரும் சமாதான நீதிவானும்)

பண்டத்தரிப்பைப் பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணம், குருநகரை வசிப்பிடமாகவும் கொண்ட மோசேஸ் எட்வேட் நேற்று (06.06.2008) வெள்ளிக் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற மோசேஸ் - அருளம்மா தம்பதியினரின் அன்பு மகனும், பிலோமினாவின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற பொன்னையா - செல்லம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், பெசில் லொயிட் (கனடா), அன்ரனி றோஸ், டெஸ்மன் மொறிஸ் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும், சிவநாதன் (யாழ்.மாநகராட்சி மன்ற சுகாதாரப் பரிசோதகர்), கனிபொழின் (கனடா), புஸ்பலதா (பிரான்ஸ்) ஆகியோரின் மாமனும், றெஜினா, சுலோசனா ஆகியோரின் அன்பு மைத்துனரும், மொறிஸ், ராணி ஆகியோரின் உடன் பிறவாச்சகோதரரும், றிச்சட், யசோதினி, றொபேட் ஆகியோரின் பெரிய தந்தையும், டெஸ்மன் றஜீவன், மஞ்சரி, கௌதம், செல்டா, சேற்றன், மல்கம், மல்ரன், நிலோபா, சியாளினி, சணா, சௌமி, சேபா, எப்சி, நிஷான், செரண் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (07.06.2008) சனிக்கிழமை பி.ப. 3 மணியளவில் அவரது இல்லத்திலிருந்து யாழ்.புனித மரியன்னை பேராலயத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டு யாழ்.புனித கொஞ்சேஞ்சி மாதா சேமக் காலையில் நல்லடக்கம் செய்யப்படும்

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

*இல.30, சென்.பற்றிக்ஸ் வீதி, யாழ்ப்பாணம்.* (சி/553161)

தகவல்: திருமதி பிலோமினா (மனைவி)

### திருமதி கிருஷ்ணன் மீனாட்சி



செல்வபுரம், உரும்பிராய் தெற்கைப் பிறப்பிடமாகவும், இல.69, கஸ்ரம் வீதி, திருகோணமலையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி மீனாட்சி கிருஷ்ணன் 05.06.2008 வியாழக்கிழமை திருகோணமலையில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற தம்பு கிருஷ்ணனின் அன்பு மனைவியும், கி.ராஜரட்ணம், திருமதி கோ.கலாவதி, கி.சந்திரசேகரன் (செல்வம் , செல்வி கி.மீனாவதி, திருமதி பொ.மல்லிகாதேவி, திருமதி து.மகாதேவி, கி.ரட்ணராஜா, காலஞ்சென்ற கி.சதீஸ்வரன் ஆகியோரின் அன்புத் தாயும், திருமதி ரா.நாகராணி, காலஞ்சென்ற ஆ.கோபால் மற்றும் திருமதி ச.ஜீவா, சி.பொன்னுத்துரை, செ.துரைசிங்கம் ஆகியோரின் மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (08.06.2008) ஞாயிற்றுக்கிழமை மு.ப. 10 மணிக்கு இல.69, கஸ்ரம் வீதி, திருகோணமலை இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் திருகோணமலை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்

*கி.சந்திரசேகரன், (செல்வம் - ஆஸ்திரேலியா).* (75152)

தகவல்: சு.அல்பிறெட் உரும்பிராய் தெற்கு, உரும்பிராய்.

### திருமதி ஜெயரூபராணி ஜீவரத்தினம்



திருநெல்வேலி கிழக்கு, செங்குந்தா வீதியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி ஜெயரூபராணி நேற்று (06.06.2008) வெள்ளிக்கிழமை சிவபதமடைந்து விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான யோசேப் மனுவல்போல் - பூரணம் தம்பதியினரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான பரஞ்சோதி - கனகம்மா தம்பதியினரின் அன்பு மருமகளும், ஜீவரத்தினத்தின் (முன்னாள் ஆளணி முகாமையாளர், வ.பி.போ.ச.) அன்பு மனைவியும், சாயிலதா (லண்டன்), சஜீவ்ராம் (கணனி இயக்குநர், இ.போ.ச(வ)) ஆகியோரின் அன்புத் தாயும், சூரியகுமாரின் (லண்டன்) அன்பு மாமியும், தேனுஜா, கிருபைஜா, ஹர்ஷன் (லண்டன்) ஆகியோரின் அன்பு பேர்த்தியும், காலஞ்சென்றவர்களான யேசுதாசன், மரியதாசன் ஆகியோரின் அன்புச் சகோதரியும், சரோஜினிதேவி, நாகபூசணி, ரஞ்சிதம், காலஞ்சென்றவர்களான தர்மரத்தினம், ஜெயரத்தினம் ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (08.06.2008) ஞாயிற்றுக்கிழமை மு.ப. 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

*114, செங்குந்தா வீதி, திருநெல்வேலி கிழக்கு, யாழ்ப்பாணம்.* (75185)

தகவல்: குடும்பத்தினர்.

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



மலர்வு 03 ✱ 05 ✱ 1955

உதிர்வு 08 ✱ 05 ✱ 2008

**அமரர் கனகசபாபதி சிறீகந்தநாயகம் (கட்டுவன்)**

(முகாமையாளர், மக்கள் வங்கி, யாழ்.பல்கலைக்கழக நீடித்த கருமபீடம்)

08.05.2008 இறைவனடி சேர்ந்த எங்கள் குடும்பத் தலைவரின் இறுதிக்கிரியைகளில் பங்குபற்றியோருக்கும், மலர் வளையங்கள் வைத்தும் கண்ணீர் அஞ்சலிகள், தந்திகள், தொலைபேசிகள் மூலம் அனுதாபம் தெரிவித்துக்கொண்டோருக்கும் மற்றும் பல வழிகளில் உதவிகள் புரிந்தோருக்கும் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்வதோடு இன்று (07.06.2008) சனிக்கிழமை முற்பகல் 10 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் பங்குபற்றுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

- குடும்பத்தினர்.

இந்துக் கல்லூரி வீதி, [illegible]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தெல்லிப்பழை நலன்புரி முகாம்களில் பூச்சாடிகளில் மரக்கறி உற்பத்தி

தெல்லிப்பழை பிரதேச செயலர் பிரிவில் உள்ள பதினொரு நலன்புரி முகாம்களில் வசிக்கும் 50 பயனாளிகளில் இருந்து



பத்துப் பயனாளிகள் தெரிவுசெய்யப்பட்டு பரிசில்கள் வழங்கி கௌரவிக்கப்பட்டுள்ளனர்.

தெல்லிப்பழை பிரதேச சபை காரியாலயத்தில் பிரதேச சபை செயலாளர் சு.முரளிதரன் தலைமையில் நடந்த பரிசளிப்பு விழாவில் பிரதம விருந்தினராகப் பிரதி விவ



தெல்லிப்பழை பிரதேச செயலகத்தில் வீட்டுத்தோட்டச் செய்கையாளருக்கான பரிசளிப்பு வழங்கும் வைபவத்தில் ஜோன்ஸ் கின்ஸ்லி உரையாற்றுகிறார்.

சாய பணிப்பாளர் சி. சிவகுமார் கலந்து சிறப்பித்தார்.

கௌரவ அதிதியாக டென்மார்க் அகதிகள் நிறுவனத்தின் பிரதிநிதி யோன் கிங்ஸ்லி கலந்து பரிசில் வழங்கிக் கௌரவித்தார்.

நிகழ்வில் விவசாய அதிகாரிகளான திருமதி அ.சிறிரங்கன், திருமதி மதிவர்ணன், செல்வி பே.மைதிலி ஆகியோரும் கலந்து கொண்டனர்.

இந்த நலன்புரி முகாம்களில் போதிய இடவசதி இல்லாத காரணத்தால் இவர்களுக்கு சாடி (Pot Farming ) விவசாய முறை அறிமுகப்படுத்தப்பட்டு இருந்தது. இதற்கான நிதி அனுசரணை மற்றும் வசதிகளை டென்மார் அகதிகளுக்கான பேரவை DRC யாழ்.மாவட்ட விவசாய திணைக்களத்தினூடாக வழங்கி இருந்தது.

இந்த விழாவில் பிளாஸ்ரிக் வாளி (50லீற்றர்), கைத்தெளி கருவி Hand Sprayer வழங்கப்பட்டன. சான்றிதழ்களும் வழங்கப்பட்டன.

இந்நிகழ்வில் கலந்து கொண்டிருந்த பிரதம விருந்தினர் சி. சிவகுமார் கருத்துத் தெரிவிக்கையில்:-

ஐம்பது லீற்றர் வாளி திரவப் பசளை தயாரிப்பதற்கும் கைப்பம்பி கிருமிநாசினி விசுறுவதற்குமானதாகும். திரவப்பசளை கிளிசிரியா இலைகளுடன் நீரை 2:3 என்ற விகிதத்தில் கலந்து 3 நாள் ஊற வைத்தபின் பயிருக்கு ஊற்ற வேண்டும். கிளிசிரியாவில் நைதரசன் அதிகமானதாகும்.

இந்தச் செய்திட்டம் விவசாயத் திணைக்களத்தின் ஒத்துழைப்புடன் டென்மார்க் அகதிகள் பேரவை மேற்கொள்ளப்பட்டதாகும். பத்து நலன்புரி நிலையங்களில் இருந்து தெரிவு செய்யப்பட்ட 50 பயனாளிகளுக்கு வீட்டுத்தோட்டப் பயிற்சியை டென்மார்க் அகதிகள் பேரவை ஒழுங்கு செய்திருந்ததுடன் கருவிகள், காய்கறி விதைகள், நாற்றுக்கள், வெற்று உரப்பைகள் என்பவற்றை விநியோகித்திருந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

### நோக்கமும் இலக்கும்

உணவு பாதுகாப்பை அதிகரித்தல் ஊட்டச் சத்தின் (NUTRITION) நிலையை விருத்தியாக்கல், உணவுக் கொள்வனவுக்கான செலவைக் குறைத்தல், வீட்டுத் தோட்ட பழக்கத்தை மேம்படுத்தல் இதன்மூலம் ஓய்வுநேரத்தை பெறுமதியானதாக்கல், உடற்பயிற்சி, மன அமைதி என்பன நோக்கமாகும்.

மண்வெட்டி, கைமுள்ளு, இரும்புச் சட்டி, வாளி, கடகம் என்பவற்றுடன் ஒவ்வொரு பயனாளிக்கும் வெற்றுப் பைகளும் வழங்கப்பட்டன.


வெண்டி, பூசணி, பாகல், புடோல், பயிற்றை, இறகு அவரை விதைகளும் விநியோகிக்கப்பட்டன. கத்தரி, தக்காளி, மிளகாய் நாற்றுகளும் தவசி முருங்கை, வல்லாரை என்பனவும் வீட்டுத்தோட்ட பயனாளிகளுக்கு கொடுக்கப்பட்டன. அத்துடன் இயற்கை பசளை பைகள் 50 கொடுக்கப்பட்டிருந்தன.

இவை உறுதிப்படுத்தப்பட்ட 'சீட்கோ' (SEEDCO) நிறுவனம், அளவெட்டி மத்தி பெண்கள் அபிவிருத்திச் சங்கம் மற்றும் வேறு விவசாய ஸ்தாபனங்களில் இருந்து பெறப்பட்டன.

### பயிற்சித்திட்டம்

தெல்லிப்பழை பிரதேச பிரிவில் உள்ள கோணற்புலத்தில் நலனோம்பு நிலையத்தில் தெரிவுசெய்யப்பட்ட பயனாளிகளுக்கு டிசம்பர் மாதம் 2007ஆம் ஆண்டு 11ஆம் திகதி வீட்டுத்தோட்டப் பயிற்சிக்கு டென்மார்க் அகதிகள் பேரவை ஒழுங்கு செய்திருந்தது.

விவசாயத் திணைக்களத்தின் விவசாய போதனாசிரியர்களான திருமதி ப.மதிவர்




ணன், பி.ஞானபாஸ்கரன் ஆகியோர் பயிற்சியை வழங்கி இருந்தனர். கையேட்டுப் பிரதிகளும் வழங்கப்பட்டன.

### அறுவடைப் பயன்பாடு

சுயநுகர்வு 72 வீதமாகவும் சுயநுகர்வும் விற்பனையும் 19 வீதமாகவும் சுயநுகர்வும் அயலவர்களுடன் பகிர்வும் 6 வீதமாகவும் பயன் இல்லாமை 3 வீதமாகவும் இருந்தது.

உபகரணப் பாவனை உச்சப்பயன்பாடு உடையதாக இருந்தது. மண்வெட்டி, வாளி என்பன மிகக் கூடுதலாகவும் பயன்படுத்தப்பட்டிருந்தன. பயற்றை, புடோல், கத்தரி, தக்காளி, வல்லாரை என்பன உயர் விளைச்சலையும் மிளகாய், சிறகவரை என்பன குறைந்த பயனையும் கொடுத்திருந்தமை அவதானிப்பின் மூலம் கண்டறியப்பட்டிருந்தது.

கருத்துக்கணிப்பின் மூலம் எதிர்காலத்தில் 92 வீதமானவர்கள் இத்தகைய வீட்டுத்தோட்ட முறைகளைப் பின்பற்ற விருப்பம் தெரிவித்துள்ளனர்.

ஒரே பார்வையில் பார்ப்பதானால் அபார விளைச்சல் 48 வீதமாகவும் நல்ல பலன் 30 வீதமாகவும் நடுத்தரமான விளைவு 18 வீதமாகவும் குறைந்த பயன் 4 வீதமாகவும் காணப்பட்டது-என்றார்.

**டென்மார்க் அகதிகள் பேரவையின் உதவியுடன் விவசாயத் திணைக்களத்தின் புதிய முயற்சி இது**

கை.பேரின்பநாயகம்

# ஊடகவியலாளர்கள் மீதான அச்சுறுத்தல்: உரிய நடவடிக்கை எடுக்கப் பிரதமர் உறுதி!

கொழும்பு,ஜூன்7

அச்சுறுத்தல் விடுக்கப்படும் ஊடகவியலாளர்கள் என்னைச் சந்தித்துப் பேசினால் அது தொடர்பாக நான் நடவடிக்கை எடுப்பேன்.

இப்படிப் பிரதமர் ரட்ணசிறி விக்கிரமநாயக்க நேற்றுமுன்தினம் நாடாளுமன்றில் கூறினார்.

ஊடகவியலாளர்களுக்கு அச்சுறுத்தல் விடுக்கப்படுவது தொடர்பக எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க பிரதமரிடம் நேற்று சபையில் கேள்வி எழுப்பினார். அப்பொழுதே பிரதமர் இவ்வாறு கூறினார்.

எதிர்க்கட்சித் தலைவர் கூறியவை வருமாறு:-

ஊடகவியலாளர்கள் இப்போது கடுமையாக மிரட்டப்படுகின்றனர். அவர்களால் சுதந்திரமாக எழுதமுடிவதில்லை.

அவர்கள் எவருக்கு எதிராகவும், ஆதரவாகவும் எழுதலாம். அது அவர்களின் உரிமை. அது சம்பந்தப்பட்டவர்களைப் பாதிக்கலாம். ஆனால் உண்மை வெளிப்படுகிறது.

அதைச் செய்கின்ற ஊடகவியலாளர்கள் பல வழிகளில் மிரட்டப்படுகின்றனர். தொலைபேசி வாயிலாகவும் நேரடியாகவும் அவர்கள் மிரட்டப்படுகின்றனர்.

பல ஊடகவியலாளர்கள் என்னைச் சந்தித்து இது தொடர்பாகக் கூறினர். ஊடகவியலாளர் சுனந்த தேசபிரியவும் தமக்கு உயிர் ஆபத்து இருப்பதாகக் கூறினார்.

இது தொடர்பாக அரசு என்ன நடவடிக்கை எடுக்கப் போகிறது? அரசு எப்படி இவர்களுக்குப் பாதுகாப்பு வழங்கப்போகிறது? - என்று பிரதமரைப் பார்த்துக் கேட்டார் ரணில்.

அதற்குப் பதிலளித்த பிரதமர், அச்சுறுத்தல்கள் உள்ள ஊடகவியலாளர்கள் தம்மைச் சந்தித்தால் அது தொடர்பாகத் தான் நடவடிக்கை எடுப்பதாகக் கூறினார். (சி)

# வன்னியில் அப்பாவிகள் மீது மிலேச்சத்தனம் அதற்குப் பதிலடியே தெற்குத் தாக்குதல்கள்!

## இப்படிக் கருதுகிறார் சிவநாதன் கிஷோர் எம்.பி.

கொழும்பு,ஜூன்7

"வன்னியில் அப்பா வித் தமிழ் மக்கள் மீது நடத்தப்படும் மிலேச்சத் தனமான தாக்குதலுக் குப் பதிலடியாகவே தெற் கில் மக்கள் மீது தாக்கு தல் நடத்தப்படுகிறது என்று நாம் நினைக்கிறோம்."

- இப்படி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் சிவநாதன் கிஷோர் நேற்றுமுன்தினம் கூறினார்.

அவசரகாலச்சட்ட நீடிப்பு பிரேரணை மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய அவர் அங்கு மேலும் கூறியவை வருமாறு:-

ஆழ ஊடுருவும் அணியினர் வன்னியில் அதிக எண்ணிக்கையான தமிழ் மக்களைக் கொன்று குவிக்கின்றனர். அதற்கான பதிலடியாகத்தான் கொழும்பில் குண்டு வெடிப்புகள் நடத்தப்படுகின்றன என்று நான் நினைக்கிறேன்.

இருந்தாலும் எந்தப் பகுதியிலும் பொதுமக்கள் தாக்கப்படுவதை எம்மால் ஏற்க முடியாது.

வன்னியில் மக்கள் கொல்லப்பட்டால் அவர்கள் புலிகள் என்றும் தெற்கில் கொல்லப்பட்டால் அவர்கள் பொதுமக்கள் என்றும் அரசு சொல்கிறது.

வன்னியில் மக்கள் கொல்லப்பட்டால் அவர்களுக்கு நட்டஈடு கிடையாது. ஆனால், தெற்கில் மக்கள் கொல்லப்பட்டால் அவர்களுக்கு உடன் நட்டஈடு வழங்கப்படுகிறது. ஏன் இந்தப் பாகுபாடு? மக்கள் மீது தாக்குதல் நடத்துவதை அரசு உடன் நிறுத்த வேண்டும். வெலிஓயாவில் இருந்து எமது பகுதிகளை நோக்கி ஷெல் தாக்குதல் நடத்தப்படுகிறது. அரசு இதை உடன் நிறுத்தவேண்டும்.

அரசு தொடர்ந்தும் மக்கள் மீது தாக்குதல் நடத்தினால் அரசு எதிர்காலத்தில் பெரும் இழப்புகளைச் சந்திக்க நேரிடும் என்றார். (சி)

# கிழக்கு மக்கள் இந்தத் தேர்தலில் இணைப்பையே உறுதி செய்தனர்!

## கூட்டமைப்பு எம்.பி. அரியம் விளக்கம்

கொழும்பு,ஜூன்7

வடக்கும், கிழக்கும் மீண்டும் இணைந்தே இருக்கவேண்டும் என்ற தமது விருப்பை கிழக்கு மாகாணத் தேர்தல் மூலம் கிழக்கு மக்கள் வெளிப்படுத்தியுள்ளனர். இத்தேர்தல் மூலம் கிழக்கு மக்கள் இந்த அரசை முற்றாக நிராகரித்துள்ளனர்.

தமிழர் தேசியக் கூட்டமைப்பு எம்.பி. அரியநேத்திரன் நேற்றுமுன்தினம் நாடாளுமன்றில் இவ்வாறு கூறினார்.

அவசரகாலச் சட்ட நீடிப்புப் பிரரேணை மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய அவர் இது தொடர்பாக மேலும் கூறியவை வருமாறு:-

கிழக்கு மாகாணசபைத் தேர்தல் ஒரு ஜனநாயகக் கொலையாகும். உலகில் எங்கும் இடம்



நாடாளுமன்றிலிருந்து...

பெற்றிராத கீழ்த்தரமான தேர்தல் இது.

இத்தேர்தலை கிழக்கு மக்கள் பகிஷ்கரிக்கவேண்டும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வேண்டுகோள் விடுத்திருந்தது. அதை மக்கள் ஏற்று அரசைத் தோற்கடித்துள்ளனர்.

கிழக்கில் உள்ள 3 மாவட்டங்களில் 11 தேர்தல் தொகுதிகள் உள்ளன. அவற்றுள் மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள பட்டிருப்புத் தொகுதியில்தான் 90 சதவீதத்துக்கு மேற்பட்ட தமிழர்கள் வாழ்கின்றனர். அவர்களில் 30 சதவீதத்திற்கும் குறைந்தவர்களே வாக்களித்துள்ளனர். அத்துடன் திருகோணமலை, கல்முனை உள்ளிட்ட பல இடங்களில் தமிழர்கள் இந்த அரசை நிராகரித்துள்ளனர்.

தேர்தலுக்குப்பின் தமிழ் - முஸ்லிம் சகோதரர்களுக்கிடையே அரசு இன வன்முறையைத் தோற்றுவித்துள்ளது. இதுதானா அரசு கிழக்கில் தோற்றுவித்துள்ள ஜனநாயகம்?

இத்தேர்தலில் அரசு வெற்றிபெற்றிருக்கின்றது என்று கருதுவதை ஏற்கமுடியாது. அங்கு நடந்தது முழுக்க முழுக்க ஊழல் மோசடிதான் - என்றார் அவர். (அ-சி)

# கிழக்கு வன்முறைகளுக்கு மூலகாரணம் அரசுதான்!

## ஜே.வி.பி. குற்றச்சாட்டு

கொழும்பு,ஜூன்7

கிழக்கு மாகாணத்தில் தற்போது இடம்பெறும் தமிழ் - முஸ்லிம் இன வன்முறைகளைத் தோற்றுவித்தது மஹிந்த ராஜபக்ஷவின் அரசுதான் என்று ஜே.வி.பி. குற்றஞ்சாட்டியுள்ளது.

ஹிட்லர் போன்றும் முசோலினி போன்றும் ஆட்சி நடத்தினால் இதற்கு எதிராக ஜே.வி.பி. மக்களுடன் சேர்ந்து கடுமையான நடவடிக்கையில் இறங்கும் என்றும் ஜே.வி.பி. எச்சரித்துள்ளது. நேற்றுமுன்தினம் நாடாளுமன்றில் இடம்பெற்ற - அவசரகாலச்சட்ட நீடிப்புப் பிரேரணைமீதான விவாதத்தில் - கலந்துகொண்டு உரையாற்றிய ஜே.வி.பி. உறுப்பினர் விஜித ஹேரத்தே இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் கூறியவை வருமாறு:-

கிழக்கு மாகாண சபைத் தேர்தலை நடத்தி மோசடிகள் மூலம் அதில் வெற்றி பெற்ற அரசு கிழக்கில் தமிழ் - முஸ்லிம்களிடையே இன வன்முறையைத் தூண்டியுள்ளது. ஹிஸ்புல்லாவுக்கு முதலமைச்சர் பதவி தருவதாகக் கூறி முஸ்லிம் மக்களை ஏமாற்றி, இறுதியில் ஹிஸ்புல்லாவையும் மிரட்டி அவர்மீது அமைச்சுப் பதவியொன்றை அரசு திணித்துள்ளது.

அது மாத்திரமன்றி அவசரகாலச்சட்டத்தைப் பயன்படுத்தி அரசு அராஜகத்தில் ஈடுபட்டுவருகிறது. பயங்கரவாதத்தை ஒழிப்பதற்காகத்தான் நாம் அவசரகாலச்சட்டத்துக்கு ஆதரவாக வாக்களிக்கின்றோம் என்றார். (சி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யா/மட்டுவில் தெற்கு சரஸ்வதி வித்தியாலயம்

## நூற்றாண்டு விழா சிறப்பு மலர் 1908 – 2008

ஓதுவது ஒழியேல்

### சேவை தொடர இறைவனை பிரார்த்திக்கின்றோம்

இன்று நூற்றாண்டு நிறைவை கொண்டாடும் மட்டுவில் தெற்கு சரஸ்வதி கனிஷ்ட வித்தியாலயத்தின் கல்விச்சேவை மென்மேலும் வளர வாழ்த்துகின்றோம். இன்றைய சூழலில் மக்களுக்கு உண்மைகளை அறிவதற்கும், தமது தேவைகளை சிறப்பாக செய்வதற்கும் முறையான கல்வி அறிவு அவசியமாகின்றது. அந்த வகையில் மாணவர்களுக்கு மாறிவரும் இவ்வுலக முறைமைகளுக்கமைய நவீன கற்றல், கற்பித்தல் நடைமுறை பயிற்றப்பட வேண்டியது காலத்தின் தேவையாகவுள்ளது. அந்த வகையில் மட்டுவில் நகர மாணவர்களுக்கு வேண்டிய கல்வியைச் சுரந்த, அவர்களை நல்வழிப்படுத்தும் பாரிய பணியில், இன்று நூற்றாண்டு கண்டுள்ள மட்டுவில் தெற்கு சரஸ்வதி வித்தியாலயத்தின் நூற்றாண்டு நிறைவு மலர் ஒன்றினை வெளியிடுவது மிக்க மகிழ்ச்சி அளிக்கிறது. நூற்றாண்டு மலரானது வித்தியாலயத்தின் கல்விப் பெருமைகளை உலகுக்கு பறைசாற்றுவதாகவும், மாணவர்களின் கற்பனைகளை வளர்த்தெடுக்கும் வகையில் அரிய பல ஆக்கங்களையும் சுமந்த வண்ணம் வெளிவருவது இன்றைய கல்விச் சமூகத்திற்கு பேருதவியாக அமைகின்றது. நூற்றாண்டு மலரை வெளியிட்டுதவிய அனைவருக்கும் எமது ஆசிகள். மேலும் இவ்வித்தியாலயத்தின் சேவை தொடர இறைவனைப் பிராத்திக்கின்றோம்.

'கேடு இல் விழுச்செல்வம் கல்வி ஒருவர்க்கு
மாடு அல்ல மற்றவை யவை'
'என்றும் வேண்டும் இன்பவன்பு'

*ஸ்ரீலஸ்ரீ சோம சுந்தர தேசிக ஞானசம்பந்தர் பரமாச்சாரிய சுவாமிகள், ஆதீன முதல்வர்.*

### நாளைய வல்லமைகளை உருவாக்கும் பணியில் பல நூறு ஆண்டுகள் வாழி

யாழ்ப்பாணத்தின் செழுமைமிக்க கல்விப் பாரம்பரியத்தின் ஊற்றுக்கண்களில் மட்டுவில் கிராமத்தின் இடம் குறிப்பிடத்தக்கது. இயற்கை அழகும் அமைதியும் இன்னமும் காக்கப்படுகின்ற மட்டுவில் சூழமைவில் கல்வித் தெய்வமான அன்னை சரஸ்வதியின் பெயரில் அமைந்தது மட்டுவில் தெற்கு சரஸ்வதி கனிஷ்ட வித்தியாலயம்.

இன்று தனது ஒரு நூற்றாண்டுகால கல்விப்பணியின் பெருமையினைக் கொண்டாடும் சரஸ்வதி வித்தியாலயத்தின் தோற்றத்துக்குக் காரணமான அன்பர் முருகேசு முத்துத்தம்பி அவர்களும், இன்று வரை வித்தியாலயத்தின் தொடர்ச்சியைக் காத்து நின்ற வித்தியாலய சமூகத்தினரும் போற்றுதலுக்குரியவர்கள்.

நூற்றாண்டு பெருமையினை காணும் வித்தியாலயத்தின் இன்றைய அதிபர், ஆசிரியர், மாணவர்கள், பெற்றோர் அனைவருக்கும் என் அன்பு வாழ்த்துக்கள்.

நாளையின் வல்லமைகளை உருவாக்கும் கல்விப்பணியில் சரஸ்வதி வித்தியாலயம் பலநூறு ஆண்டுகள் நிறைந்து வாழி!

*பேராசிரியர் என். சண்முகலிங்கன்,*
*துணைவேந்தர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.*

### தனித்துவமான பாரம்பரியத்தை உருவாக்கிய பாடசாலை

யாழ். மட்டுவில் தெற்கு சரஸ்வதி வித்தியாலயத்தின் நூற்றாண்டு நிறைவையொட்டி வெளியிடப்படும் மலருக்கு ஆசி வழங்குவதில் பெருமையடைகிறேன்.

சைவத்தையும் தமிழையும் வளர்ப்பதற்கு பல பெரியார்களை இவ்வுலகுக்கு ஈந்த ஒரு புனித மண்ணாக மட்டுவில் பிரதேசம் விளங்குகின்றது. இத்தகைய பெருமைமிக்க பெரியார்களில் திருவாளர் முருகேசு முத்துத்தம்பி அவர்களால் 1908 வைகாசி எட்டில் உருவாக்கப்பட்ட பாடசாலையே யாழ். மட்டுவில் தெற்கு சரஸ்வதி வித்தியாலயம்.

ஒரு சிறிய திண்ணைப் பாடசாலையாக உருவாக்கப்பட்டு சைவமும் தமிழும் தளைக்கச் செய்து, இன்று அப்பிரதேசத்திற்கென்றே ஒரு தனித்துவமான கல்விப்பாரம்பரியத்தை உருவாக்கி, தென்மராட்சிக் கல்வி வலயத்திலேயே தலை நிமிர்ந்து நிற்கின்ற அதேவேளை, இந்த ஆண்டு நூறு அகவையினைப் பூர்த்தி செய்து நூற்றாண்டு விழாவையும் கொண்டாட தயாராகி வருகின்றது.

பாடவிதான, இணைப்பாடவிதான செயற்பாடுகளிலும் பல்வேறு கோணங்களில் முன்னேற்றங் கண்டு வருகின்ற தரம் II பாடசாலைகளில் இப்பாடசாலையும் குறிப்பிடக்கூடியது.

இந்நிலையில் நூற்றாண்டு விழாவினைக் கொண்டாடுவதற்கு முயற்சி எடுத்து வருகின்ற பாடசாலைச் சமூகத்தினரை வாழ்த்துகின்றேன்.

*V. இராசையா, மாகாணக் கல்விப்பணிப்பாளர், வடமாகாணம்.*



### பாடசாலை வரலாறு

ஆரம்பித்த ஆண்டு - 1908 ஆம் ஆண்டு வைகாசி மாதம் 8 ஆம் திகதி
தோற்றுவித்தவர் உயர்திரு முருகேசர் முத்துத்தம்பி
1910 ஆம் ஆண்டு இப்பாடசாலைக்கு சைவப்பிரகாச சரஸ்வதி வித்தியாசாலை என நாமம் சூட்டப்பட்டது.
3.3.1962 பாடசாலை அரசினால் சுவீகரிக்கப்பட்டது
1978 க.பொ.த சாதாரண தரம் ஆரம்பிக்கப்பட்டது
1979 கிணறு அமைக்கப்பட்டது
1983 திறந்தவெளி அரங்கு அமைக்கப்பட்டது
2000 யுத்தத்தினால் அழிவடைந்தது
2003 குழாய் மூலம் குடிநீர் விநியோகம்
2004 மேலைத்தேய வாத்தியக் கருவிகள் வாங்கப்பட்டது
2007 க.பொ.த சா/தரத்தில் உயர் பெறுபேறு கிடைத்தது.

### அதிபர்கள் வரிசையில்....

| | |
|---|---|
| 08.05.1908 | - 01.01.1920 |
| 01.01.1920 | - 31.12.1960 திரு அ.கந்தையா |
| 01.12.1961 | - 31.05.1963 - திருமதி அ.இராமலிங்கம் |
| 01.06.1963 | - 04.01.1966 திரு.சி.தம்பிராசா |
| 05.01.1966 | - 23.08.1969 திரு.ச.மகாலிங்கம் |
| 12.09.1969 | - 31.08.1971 திரு.அ.பரமநாதர் |
| 01.09.1971 | - 15.07.1973 திரு.சி.வீரகத்தி |
| 16.07.1973 | - 31.01.1988 திரு.ஆ. செல்லையா |
| 01.02.1988 | - 26.04.1989 திரு.இ.கணேசன் |
| 26.04.1989 | - 27.10.1998 திரு.சி.நாகராசா |
| 28.10.1998 | - 14.03.2002 திரு.S.R.மகேந்திரன் |
| 15.03.2002 | - 01.05.2003 திருமதி வ.மேகலிங்கம் |
| 01.05.2003 | - இன்றுவரை திரு.வ.நடராசா |

### ஸ்தாபகரின் எண்ணக்கருவை நிறைவு செய்ய வேண்டும்.

1908 ஆம் ஆண்டு வைகாசித்திங்கள் 8 ஆம் நாள் மட்டுவிலூரில் வாழ்ந்த பெரியார் முத்துத்தம்பி என்கின்ற முத்துவாத்தியார் அவர்களால் ஆரம்பிக்கப்பட்ட இவ்வித்தியாலயம், இன்று 2008 இல் நூற்றாண்டை நிறைவு செய்து விழாக் காண்கின்றது. இந்நூற்றாண்டு நிறைவு ஆண்டில் இப்பாடசாலையின் சிறந்த முகாமைக் கட்டமைப்பினாலும், ஆசிரியர்களின் அர்ப்பணிப்புமிக்க சேவையினாலும் இவ்வாண்டு க.பொ.த. (சா/த) இல் உயர்ந்த கல்வி அடைவினை பெற்றிருப்பது இந்நிறைவு ஆண்டிற்கு மகுடம் சூட்டி நிற்கின்றது. மேலும் இப்பாடசாலை ஆல் போல் தழைத்து, அறுகு போல் வேரூன்றி இக்கிராம, அயல்கிராமச் சிறார்களுக்கு சிறந்த கல்விச்சேவையாற்றி, சிறந்த பிரஜைகளை உருவாக்கி, ஸ்தாபகரின் எண்ணக்கருவை நிறைவு செய்ய வேண்டி வாழ்த்தி ஆசி கூறி அமைகின்றேன்.

*Dr. ப. நித்தியானந்தன்*
*பாடசாலை அபிவிருத்திச் சங்கச் செயலாளர்*

### வளர்ச்சிக்கு உறுதுணையாயிருப்போம்.

யா/மட்டுவில் தெற்கு சரஸ்வதி வித்தியாலயம் நூறு ஆண்டுகளைப் பூர்த்தி செய்துள்ளது. ஆரம்பத்தில் காவிய பாடசாலையாக இருந்த போதிலும் கல்விப் பணிக்காக முத்துவாத்தியாரால் நமக்கு விட்டுச் செல்லப்பட்ட முது சொத்து அது. பல நூறு மாணவர்கள் பல்கலைக்கழகம் சென்று வெளியேறியுள்ளார்கள்.

சைவப் பாரம்பரியம் குன்றாது கல்வியோடு ஒழுக்கத்தையும் வளர்த்து வரும் பாடசாலை நிர்வாகத்திற்குப் பழைய மாணவர்களாகிய நாம் என்றென்றும் உறுதுணையாக இருப்போமென்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறோம்.

*பழைய மாணவர்கள் சார்பாக, செல்வி.அ. சிவகாந்தி*

### பல நூற்றாண்டுகள் நிலைபெற்று சமூகத்துக்கு புகழ் சேர்க்கட்டும்

யாழ். மட்டுவில் தெற்கு சரஸ்வதி கனிஷ்ட வித்தியாலயத்தின் நூற்றாண்டு விழாவில் இக்கல்லூரி சமூகத்தை வாழ்த்தி ஆசி கூறுவதில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

அமரர் முருகேசு முத்துத் தம்பி அவர்களின் தூர நோக்கில் 08.05.1908 இல் ஆரம்பிக்கப்பட்ட இவ் வித்தியாலயம் இன்று பாடசாலை தரம் இரண்டிற்கு வளர்ச்சி கண்டுள்ளமை மகிழ்ச்சிக்குரியது.

இச் சூழலில் 260 பிள்ளைகளுடன் தரம்1 முதல் 11 வரை கல்வி கற்கும் மாணவச்செல்வங்களுக்கு அர்ப்பணிப்புடன் பணியாற்றும் அதிபர், ஆசிரியர்களை பாராட்டி வாழ்த்துவதுடன், இவ்வித்தியாலயம் இன்னும் பல நூற்றாண்டு நிலை பெற்று, தொடர்ந்து யாழ். கல்விச் சமூகத்திற்கு புகழ் சேர்க்க என் ஆசிகளை கூறி நிற்கின்றேன்.

*அதிவண. தோமஸ் சவுந்தரநாயகம், யாழ். ஆயர்.*

### காலத்தின் தேவையை உணர்ந்து சர்வதேசத்துக்கு உயரவேண்டும்

நூற்றாண்டு விழாவைக் கொண்டாடும் யாழ். மட்டுவில் தெற்கு சரஸ்வதி கனிஷ்ட வித்தியாலயம் அதன் அதிபர், ஆசிரியர்கள், மாணவச்செல்வங்கள், பெற்றோர்கள், பழைய மாணவர்கள், பாடசாலை நலன்விரும்பிகள் மற்றும் இப்பிரதேச மக்கள் அனைவரதும் வாழ்நிலை மேம்பாடு அடைய என் உளமார்ந்த வாழ்த்துக்களும், நல்லாசிகளும் உரித்தாகட்டும்.

திண்ணைப்பள்ளியாக ஆரம்பித்து முருகேசு முத்துத்தம்பி அவர்களின் அரும் முயற்சியால் ஆரம்பப் பாடசாலையாக மலர்ந்து இன்று கனிஷ்ட வித்தியாசாலையாக, தரம்II பாடசாலையாக வளர்ச்சி கண்டிருக்கும் இப்பாடசாலை வரலாறு மக்கள் பங்களிப்புடனான சமூக வளர்ச்சிக்கு முன்னுதாரணமாகக் கொள்ளத் தக்கது எனலாம்.

யாழ். மாவட்டத்தின் அழியாச்செல்வமான கல்வி மென்மேலும் மேன்மையடைய மட்டுவில் தெற்கு சரஸ்வதி கனிஷ்ட வித்தியாலயம் உட்பட அனைத்துப் பாடசாலைகளும் உளப் பூர்வமான பங்களிப்பை நல்க வேண்டும் எனக் கேட்டுக்கொள்கிறேன்.

''ஓதுவது ஒழியேல்''

*க. கணேஸ், மாவட்ட செயலர்/அரசாங்க அதிபர்*
*மாவட்ட செயலகம், யாழ்ப்பாணம்.*

### அனர்த்தங்களால் தளராமல் வீறுநடை போடும் பாடசாலை

தமிழும் சைவமும் வளர்த்த மட்டுவிற் பதியிலே, நூற்றாண்டு விழாக்காணும் யாழ். மட்டுவில் தெற்கு சரஸ்வதி வித்தியாலயத்துக்கு ஆசிச் செய்தி வழங்குவதில் பெருமகிழ்வடைகிறேன்.

08.05.1908 அன்று திரு. முருகேசு முத்துத்தம்பி எனும் பெரியாரால் திண்ணைப் பள்ளிக்கூடமாக ஆரம்பிக்கப்பட்டு, இன்று பெருவளர்ச்சியடைந்து பெருவிருட்சமாக, தரம் 1 முதல் 11 வரையான வகுப்புக்களைக் கொண்டு விளங்கும் இப்பாடசாலை, இடையே போரனர்த்தத்தால் பாதிப்புற்ற போதும், தளர்வுறாமல் இன்றும் வீறுநடை போட்டுவருகிறது.

இப்படசாலை இன்னும் பல்லாண்டு காலம் நிலை பெற்றுத் தன் பயன்மிகு சேவையைச் சமூகத்துக்கு வழங்க, எல்லாம் வல்ல இறைவனை இறைஞ்சுகிறேன்.

*கு.பிரேமகாந்தன்*
*வலயக்கல்விப்பணிப்பாளர், தென்மராட்சி.*

### சிரம் சாய்த்து வணக்கம் தெரிவிக்கிறார் முதல்வர்

எமது வித்தியாலயம் இன்று நூறு ஆண்டுகள் கடந்து நூற்றாண்டு விழாக் காணும் இன்றைய நாளில் அதன் கண்ணாடியாக வெளிவரும் மலருக்கு ஆசியுரை வழங்கும் பாக்கியம் கிட்டியமையையிட்டு மட்டில்லா மகிழச்சியடைகின்றேன்.

எனது சிந்தனை கருவூலத்திற்கு மதிப்பளித்து முழு வடிவம் கொடுத்து இப்பாரிய வரலாற்று முக்கியம் வாய்ந்த இந்தச் செயற்பாட்டை முன்னெடுக்கும் நூற்றாண்டு விழாச்சபை உறுப்பினர்களுக்கும் மலர் வெளியீட்டுக் குழுவினருக்கும் எனது நன்றியையும் பாராட்டுதலையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த அரும் பணியை முன்னெடுக்க சகல வழிகளிலும் ஒத்துழைப்பு வழங்கிய எனது மதிப்புமிக்க பெற்றோர்கள், பழைய மாணவர்கள், நலன் விரும்பிகள், தாபகரின் குடும்ப உறவுகள் அனைவருக்கும் எனது சிரம் சாய்ந்த வணக்கத்தை தெரிவிக்கின்றேன்.

*திரு.வ. நடராசா, முதல்வர், யா/மட்டுவில் தெற்கு சரஸ்வதி வித்தியாலயம்.*

நூறு அகவை கண்டு நூற்றாண்டு விழாக்காணும் எமது சரஸ்வதி வித்தியாலயத்தின் உயர்ந்து நிற்கும் கல்விப்பணி இன்றுபோல் மேன்மேலும் சிறக்க வாழ்த்துகின்றோம்

கதிரவன் இரும்பகம்
22 டச்சு வீதி, சாவகச்சேரி

கண்ணன் வீடியோ
இல.35 கண்டிவீதி, சாவகச்சேரி
பருத்தித்துறை வீதி, சாவகச்சேரி

மைக்றோபோன் மல்ரிசொப்
இல.2. பஸ் நிலையம் சாவகச்சேரி

இலட்சுமி களஞ்சியம்
நுணாவில் சந்தி, சாவகச்சேரி

இராசம் எலக்ரிக்கல்
கண்டிவீதி, சாவகச்சேரி

யசோ மோட்டோர்ஸ்
ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்

சுரேஸ் மோட்டோர்ஸ் & என்ஜினியர்ஸ்
கண்டிவீதி, நுணாவில் மேற்கு, சாவகச்சேரி.

டேவிட் பீரிஸ் மோடடோர் கொம்பனி லிமிடெட்டின் அங்கீகாரம் பெற்ற உதிரிப்பாக விற்பனை முகவரும் இலவச சேவை முகவரும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்.மறை மாவட்டத்தின் குருக்களாக நால்வர் திருநிலைப்படுத்தப்பட்டனர்

குருநகர்,ஜூன்7

யாழ்.மறை மாவட்டத்தின் புதிய குருக்களாக நான்கு திருத்தொண்டர்கள் யாழ். ஆயர் மேதகு தோமஸ் சௌந்தரநாயகம் ஆண்டகையால் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை யாழ்.மரியன்னை பேராலயத்தில் திருநிலைப்படுத்தப்பட்டனர்.

நாரந்தனை தூய இராயப்பர் சின்னப்பர் ஆலயப் பங்கைச் சேர்ந்த இ.ஜினோல்ரன் விஜின்ரஸ், பத்தாவத்தை புனித பிரிவு நேரியார் ஆலய பங்கைச் சேர்ந்த எட்வேட்ராஜா எட்வினாதன், யாழ்.அடைக்கல அன்னை ஆலய பங்கைச் சேர்ந்த அமிர்தநாயகம் ஜேம்ஸ்நாதன், செம்பியன்பற்று புனித பிலிப் நேரியார் ஆலய பங்கைச் சேர்ந்த அன்ரனி வின்சன் சில்வெஸ்ரார்தாஸ் ஆகியோர்களே நேற்று திருநிலைப்படுத்தப்பட்ட புதிய குருக்களாவர்.

இக்கூட்டுத் திருப்பலியில் யாழ்.மறை மாவட்ட குருமுதல்வர் வண.பிதா ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் அடிகளார், அமல மரித் தியாகிகள் சபையின் யாழ்.மாகாண குரு முதல்வர் வண.பிதா எம்.போல் நட்சத்திரம் அடிகளார், கொழும்புத்துறை பிரான்சிஸ் சவேரியார் குருமட முதல்வர் வண. பிதா எஸ்.வி.பி.மங்களராஜா அடிகளார் ஆகியோர் கலந்துகொண்டனர்.

புதிய குருக்களாகத் திருநிலைப்படுத்தப்பட்ட இந்நான்கு குருக்களில் ஜினேஸ்வரன் விஜின்ரஸ் அடிகளார் தனது முதல் திருப்பலியை நேற்று பண்டத்தரிப்பு தூய பற்றிமா அன்னை ஆலயத்தில் ஒப்புக்கொடுத்தார்.

அமிர்தநாயகம் ஜேம்ஸ்நாதன் அடிகளார் தனது முதல் திருப்பலியை இன்று சனிக்கிழமை யாழ்.தூய அடைக்கல அன்னை ஆலயத்திலும்,

எட்வேட்ராஜா எட்வினாதன் அடிகளார் தனது முதல் திருப்பலியை நாளை ஞாயிற்றுக்கிழமை பத்தாவத்தை புனித பிலிப்பு நேரியார் ஆலயத்திலும்,

அன்ரனி வின்சன் சில்வெஸ்ரார்தாஸ் அடிகளார் தனது முதல் திருப்பலியை எதிர்வரும் திங்கட்கிழமை தும்பளை தூய லூர்து அன்னை கெபியிலும் முதல் திருப்பலியை ஒப்புக்கொடுக்க உள்ளார்கள். (202-51)

# பெண்களைக் குடும்பத் தலைவர்களாகக் கொண்ட அறுபது குடும்பங்களுக்கு வாழ்வாதாரத் திட்டம்

யாழ்ப்பாணம்,ஜூன்7

யாழ்.மாவட்டத்தில் கணவனை இழந்த மற்றும் கணவர்களால் கைவிடப்பட்ட பெண்களைக் குடும்பத் தலைவர்களாகக் கொண்ட அங்கத்தவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த சேவாலங்கா நிறுவனம் சுயதொழில் முயற்சிகளை அறிமுகப்படுத்தி வருகின்றது.

அதன் ஒரு பகுதியாக அறுபது குடும்பங்கள் குடாநாட்டில் இருந்து தெரிவுசெய்யப்பட்டு ஆடு வளர்க்கும் திட்டம் நடைமுறைப்படுத்தப்படுகிறது.

ஐ.ஒ.எம். நிறுவனத்தின் அனுசரணையுடன் சண்டிலிப்பாய், தெல்லிப்பழை, பருத்தித்துறை பகுதிகளில் இருந்து தலா இருபது பயனாளிகள் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

தெரிவுசெய்யப்பட்டவர்களுக்கு யமுனா பாரி, சாணன் ரக நல்லின (கலப்பின) ஆடுகள் வழங்கப்படவுள்ளன. இவற்றை வளர்ப்பதற்கான கொட்டகைகளும் அமைத்துக் கொடுக்கப்படுகின்றன.

இந்தத் திட்டம் குறித்த பிரதேச செயலர் பிரிவுகளில் விரைவில் நடைமுறைப்படுத்தப்படுமென பிரதித் திட்டமிடல் அதிகாரி உதயனுக்குத் தெரிவித்தார். (202-302)

# திரைப்படக்காட்சி

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகப் புற நிலைப் படிப்புகள் அலகின் ஏற்பாட்டில் இடம்பெற்றுவரும் கல்விசார்/கலைத்துவம் சார் படக்காட்சித் தொடரில் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு சர்வதேச நடிகருக்கான விருதுகள் பெற்ற அன்ரனி குயின் நடிப்பிலும் முஸ்தபா அக்காட் இன் இயக்கத்திலும் உருவான 'ஓமர் முக்தார்' (தமிழில்) திரைப்படம் வீடியோ காட்சியாக அரசறிவியல் விரிவுரை மண்டபத்தில் காண்பிக்கப்படவுள்ளது.

இது இத்தாலிக்கெதிராக லிபியாவில் ஏற்பட்ட தேசிய விழிப்புணர்வைச் சித்திரிக்கும் திரைப்படமாகும்.

திரைப்படக் காட்சியின் இறுதியில் திரைப்படம் பற்றிய கலந்துரையாடல் ஒன்றும் இடம்பெறும். (202)

# ஆங்கில தினப் போட்டிகளில் தியாகராசா ம.ம.வித்தி முதலிடம்

வேலணை,ஜூன்7

நெடுந்தீவு, வேலணை, ஊர்காவற்றுறை ஆகிய பிரதேசப் பாடசாலைகளுக்கிடையே நடைபெற்ற ஆங்கிலதினப் போட்டிகளில் 19 முதலிடங்களையும் 12 இரண்டாம் இடங்களையும் கலாநிதி ஆ. தியாகராசா ம.ம.வித்தியாலயம் பெற்றுள்ளது.

யாழ்ற்ரன் கல்லூரி 12 முதலிடங்கள், 16 இரண்டாம் இடங்களையும், வேலணை மத்திய கல்லூரி 12 முதலிடங்கள், 11 இரண்டாம் இடங்களையும் பெற்றுள்ளன. (202-267)

# யாழ்.பிரதேச அபிவிருத்திப் பணிகளுக்கு எட்டு லட்சம் ரூபா நிதி ஒதுக்கீடு

நல்லூர்,ஜூன்7

யாழ்ப்பாணப் பிரதேச செயலகத்திற்குட்பட்ட பிரதேச அபிவிருத்திப் பணிகளுக்கென முதற்கட்டமாக 8 லட்சம் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

முகமதியா ஜூம்மா பள்ளிவாசல் கல்வி நிலையத்திற்குத் தளபாடங்கள், புத்தகங்கள் கொள்வனவு செய்வதற்கு 75ஆயிரம் ரூபாவும் -

யாழ்.பிரதேச தபாலக ஊழியர் நலன்புரி விளையாட்டுக் கழகத்திற்கு விளையாட்டு உபகரணங்கள் கொள்வனவுக்கு 75ஆயிரம் ரூபாவும் -

கொழும்புத்துறை கிழக்கு மாதர் சங்கத்திற்கு தளபாடங்கள் கொள்வனவுக்கு 50 ஆயிரம் ரூபாவும் - பாஷையூர் மேற்கு மாதர் கிராம அபிவிருத்திச் சங்கத்திற்கு தையல் இயந்திரங்கள் கொள்வனவுக்கு 50ஆயிரம் ரூபாவும் -

றெக்கிளைமேசன் சனசமூக நிலையப் புனரமைப்பு மற்றும் தளபாடக் கொள்வனவுக்கு ஒரு லட்சம் ரூபாவும் -

நாவாந்துறை சென்.நிக்கிலஸ் சனசமூக நிலைய கட்டடப் புனரமைப்புக்கு ஒரு லட்சம் ரூபாவும் -

நாவாந்துறை கென்னடி சனசமூக நிலையத்தின் தளபாடங்கள் கொள்வனவுக்கு 50ஆயிரம் ரூபாவும் - நாவாந்துறை றோ.க. பாடசாலை வகுப்பறை திருத்த வேலைகளுக்கு ஒரு லட்சம் ரூபாவும் -

யாழ்.திருக்குடும்பக் கன்னியர்மடம் பாலர் பாடசாலை சிறுவர் பூங்கா புனரமைப்பிற்கு ஒரு லட்சம் ரூபாவும் யாழ்.புனித பொஸ்கோ வித்தியாலயத் தளபாடங்கள் கொள்வனவு ஒரு லட்சம் ரூபாவும் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. (202-111)

## குடாநாட்டின் பிரதேசச் செய்திகள்

### ஆன்மீக நிகழ்வு

வடமராட்சி,ஜூன்7

வடமராட்சி ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் கோயிலில் உள்ள பெரியாழ்வார் ஆச்சிரமத்தில் பிரதி ஞாயிறு தோறும் இடம்பெற்று வரும் ஆன்மீக நிகழ்வுத் தொடரில் நாளை ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11 மணியளவில் ''சமயமும் வாழ்வும்'' எனும் தலைப்பில் சொற்பொழிவு நடைபெறும்.

எஸ்.ஞானேஸ்வரன் இச்சொற்பொழிவை நிகழ்த்துவார். (202-236)

## சமய சந்நிதிகளில்

யாழ்ப்பாணம்,ஜூன்7

சுன்னாகம், கந்தரோடை பெரியதம்பிரான் ஆலயத்தில் நாளை ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு அபிசேக ஆராதனையும் 12 மணிக்கு பூசைகளும் நடைபெறும். (202)

* * *

யாழ்ப்பாணம்,ஜூன்7

கொக்குவில் மேற்கு, சொர்ண வடலி ஸ்ரீ சொர்ண சித்தி விநாயகர் ஆலய பெருந் திருவிழா இன்று சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 18ஆம் திகதி காலை 9 மணிக்குத் தேர்த்திருவிழாவும் மறுநாள் காலை 9 மணிக்குத் தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும். (202)

* * *

சுழிபுரம்,ஜூன்7

வழக்கம்பரை முத்துமாரி அம்பாள் ஆலய வருடாந்த உற்சவம் நாளை ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 17ஆம் திகதி தேர்த்திருவிழாவும் மறுநாள் தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும். (202-28)

# சாரணர்களுக்கு சின்னம் சூட்டும் நிகழ்வுகள்

யாழ்ப்பாணம்,ஜூன்7

கைதடி நவீல்ட் பாடசாலை சாரணர்களுக்கு சின்னம் சூட்டும் நிகழ்வு அண்மையில் பாடசாலை மண்டபத்தில் அதிபர் தலைமையில் இடம்பெற்றது.

சாரணர் மாவட்ட ஆணையாளர் செ.சுப்பிரமணியம் முன்னிலையில் சாரண தலைவர் எஸ்.பிரபாஸ்கரன் சாரணர்களுக்கு சின்னங்களைச் சூட்டினார். (202-207)

* * *

மிருசுவில், விடத்தற்பளை கமலாசினி வித்தியாலய குருளைச் சாரணர்கள், சாரணர்கள் ஆகியோருக்கு சின்னஞ் சூட்டும் நிகழ்வு அண்மையில் வித்தியாலய மண்டபத்தில் இடம்பெற்றது.

வித்தியாலய அதிபர் பொ.கனகரத்தினம் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வுக்கு கிளிநொச்சி - தென்மராட்சி சாரணர் மாவட்ட ஆணையாளர் செ.சுப்பிரமணியம் முதன்மை விருந்தினராகக் கலந்துகொண்டார்.

சாரண ஆசிரியர் ந.மதுராகரன் சின்னங்களைச் சூட்டியதுடன் கழுத்துப்பட்டி மற்றும் துண்டங்களையும் சாரணர்களுக்கு வழங்கினார். (202-207)

* * *

மட்டுவில் கமலாசனி வித்தியாலய சாரணர்கள், குருளைச் சாரணர்கள் ஆகியோருக்கு சின்னஞ்சூட்டும் நிகழ்வு அண்மையில் வித்தியாலய மண்டபத்தில் அதிபர் செ. பேரின்பநாதன் தலைமையில் நடைபெற்றது.

சாரண ஆக்கேலா திருமதி ப.பிரபாஸ்கரன், உதவி ஆக்கேலா திருமதி சிவராசா ஆகியோர் சாரணர்களுக்குச் சின்னங்களைச் சூட்டினர்.

கிளிநொச்சி - தென்மராட்சி சாரணர் மாவட்ட ஆணையாளர் செ.சுப்பிரமணியம் இந்நிகழ்வில் முதன்மை விருந்தினராகக் கலந்துகொண்டார். (202-207)

# உணர்வு கடந்து உண்மையைக் கண்டறிய உதவும் தொல்லியல்

## பல்கலை. துணைவேந்தர் கருத்து



நல்லூர்,ஜூன்7

மனித குலத்தின் வரலாறு தவிர்க்கமுடியாத பல்வேறு காரணங்களால் உரிய காலத்தில் எழுதமுடியாமற் போய்விட்டது. வரலாறு தானே பேசாது. தேடினால் தான் கிடைக்கும் என யாழ்.பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் என்.சண்முகலிங்கன் கூறினார்.

யாழ்.பல்கலைக்கழகத் தொல்லியல் அறிவு வட்டத்தின் வெளியீடான 'தேடல்' சஞ்சிகை வெளியீட்டு விழா பல்கலைக் கழக பொருளியல் மண்டபத்தில் பா.கபிலன் தலைமையில் நடைபெற்றது.

நூலை வெளியிட்டுப் பேசிய துணைவேந்தர் சண்முகலிங்கன் மேலும் கூறியதாவது:

தொல்லியல் வரலாற்றுக்கு முற்பட்ட கால மக்களின் வாழ்வினை மீளக் கட்டமைப்பதில் மட்டுமன்றி வரலாறு முழுமையும் நிகழும் பண்பாட்டு மாற்றங்களை விளக்குவதிலும் உதவுகிறது. யாழ்ப்பாண வரலாறுகளைக் கூட அறியமுடியாத நிலை அரசியல் அனுசரணைக்கு முக்கியமானது. உணர்வு கடந்து உண்மை பேசும் ஆணிவேரைக் கண்டறிய இது தேவை. அந்தவகையில் எமது பண்பாட்டின், நாகரிகத்தின் வேர்களைத் தேடும் மாற்றங்களைப் புரிந்து கொள்ளும் காலக் கடமையில் 'தேடல்' வரப்பிரசாதமாகும். குறைந்த அளவு மாணவர்களைக் கொண்டிருந்தாலும் நிறைந்த ஆய்வுகளைக் கண்டறியும் தேடலின் பயனாக எமது கடந்த கால வரலாற்று உண்மைகளை வெளிக்கொணரும் வாய்ப்புக்கள் கிடைக்கும். இந்தத் துறை பல்கலைக்கழகத்தில் நிலைபெறவேண்டும் - என்றார்.


இந்நிகழ்வில் பேராசிரியர் அ.புஷ்பரட்ணம், பேராசிரியர் வி.பி.சிவநாதன், பேராசிரியர் எஸ்.சத்தியசீலன் ஆகியோர் உட்பட பலர் உரையாற்றினர். (111)



யாழ்.பல்கலைக்கழக தொல்லியல் ஆய்வு வட்டத்தின் 'தேடல்' நூல் நேற்றுமுன்தினம் வெளியிட்டு வைக்கப்பட்டது.

நிகழ்வில் யாழ்.பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் என்.சண்முகலிங்கன் நூலை வெளியிட்டு வைப்பதை முதலாவது படத்தில் காணலாம். தொல்லியல்துறைத் தலைவர் பேராசிரியர் எஸ்.சத்தியசீலன், பேராசிரியர் வி.சிவசுவாமி, பேராசிரியர் அ.புஷ்பரட்ணம், பேராசிரியர் வி.பி.சிவநாதன் ஆகியோர் உரை நிகழ்த்துவதை அடுத்துள்ள படங்களில் காணலாம். (படங்கள்: லக்ஷ்மன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொழும்புத்துறை சென் யோசப் வித்தியாலயத்தின் முத்தமிழ் விழா கடந்த 28 ஆம் திகதி வித்தியாலய மண்டபத்தில் இடம் பெற்றது.

நிகழ்வில் வித்தியாலய அதிபரும் நடனகலாமணியுமான பா. வின்சனும் அவரது பாரியாரும் திருத்தாண்டவ நடனம் ஆடுவதை முதலாவது படத்தில் காணலாம்.

சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்ட கரித்தாஸ்-கியூடெக் நிறுவன இணைப்பாளர் செ. யோசப்பாலா உரை யாற்றுவதைஇரண்டாவது படத்தில் காணலாம்.

*(படங்கள்: நாயகம்)*

# குடாநாட்டில் சமுர்த்தி உதவி பெறும் பயனாளிகளுக்கு 10 வருடங்களாக உதவித்தொகையில் அதிகரிப்பில்லை

## மனிதநேய அமைப்புகளின் குழு சுட்டிக்காட்டு

கொழும்பு, ஜூன்7

யாழ்.குடாநாட்டில் சமுர்த்தி உதவி பெறுபவர்களுக்கான உதவித் தொகைகள் கடந்த 10 வருடகாலப் பகுதியில் அதிகரிக்கப்படவேயில்லை என மனித நேய அமைப்புக் குழு சுட்டிக்காட்டியுள்ளது.

குழுவின் வாராந்த அறிக்கையில் இவ் விவரம் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அந்த வாராந்த அறிக்கையின் ஒரு பகுதி நேற்றைய உதயனில் வெளியாகியிருந்தது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

யாழ். மாவட்டத்தில் ஏப்ரலில் இடம் பெற்ற முகமாலை மோதலிற்குப் பின்னர் கடுமையான பாதுகாப்பு நடைமுறைகள் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன. பல கொலைகளும் ஆள்கடத்தல்களும் இடம் பெற்றன என ஊடகங்களும் வேறு தகவல்களும் தெரிவிக்கின்றன.

1990ஆம் ஆண்டிலிருந்து மீள்குடியேற்ற மற்றும் அனர்த்த முகாமைத்துவ அமைச்சினால் வழங்கப்பட்டு வந்த உணவு உதவியைப் பெற்றுவந்த யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த அறுபதாயிரம் வறிய குடும்பங்களுக்கு எதிர்காலத்தில் உணவு உதவியை வழங்க உலக உணவுத் திட்டம் தீர்மானித்துள்ளது.

இவர்களுக்கு தற்போது அமைச்சு உதவி வழங்குவதில்லை.

மேலும் இவர்கள் உயர் பாதுகாப்பு வலயம் மற்றும் பாதுகாப்புக் கட்டுப்பாடுகள் காரணமாக விவசாயம், மீன்பிடித்துறை போன்ற தமது ஜீவனோபாயத் தொழில்களை மேற்கொள்ள முடியாத நிலையில் உள்ளனர்.

அல்லைப்பிட்டியில் மீளக்குடியேறிய 61 மக்களுக்கு அவர்களது பாரம்பரிய பகுதியில் மீன்பிடிப்பதற்கான அனுமதி மட்டுப்படுத்தப்பட்ட அளவிலேயே வழங்கப்பட்டுள்ளது.

யாழ். குடாநாட்டில் நிலக்கண்ணி வெடிகளை அகற்றும் பணி உடனடியாக ஆரம்பிக்கப்படாவிட்டால் அங்கிருந்து வெளியேற வேண்டியிருக்கும் என கண்ணிவெடி அகற்றும் அமைப்புகள் தெரிவித்துள்ளன.(சி)

# தென்மராட்சி வலய பாடசாலைகளின் புராண படனப் போட்டி முடிவுகள்

யாழ்ப்பாணம் , ஜூன்7

தென்மராட்சி கல்விவலயப் பாட்சாலைகளின் தரம் 10,11 வகுப்பு மாணவர்களிடையே அண்மையில் நடத்தப்பட்ட புராண படனப் போட்டிகளின் முடிவுகள் வலயக் கல்விப் பணிப்பாளரினால் வெளியிடப்பட்டுள்ளன.

முதல் மூன்று இடங்களைப் பெற்றவர்களின் விவரம் வருமாறு:

ப. மயூரா-(மீசாலை வீரசிங்கம் ம.வி. ), ஞா.மிதுனா- (மீசாலை வீரசிங்கம் ம.வி.),யோ. விதுஸ்ஸன்- (உசன் இராமநாதன் ம.வி.) , சி. கனிஸ்ஸா- (உசன் இராமநாதன் ம. வி.), தி.ஆரணி- (மட்டுவில் சந்திரமௌலீச வித்தி.), ச. மதுரா (மட்டுவில் சந்திரமௌலீச வித்தி.),

சான்றிதழ்கள் பெறுவோர் விவரம் வருமாறு:

சி.சுதர்சினி-(கச்சாய் அ.த.க.பாட.), சி. சரண்யா-(கச்சாய் அ.த.க.பாட.), க.கயானி-(நாவற்குழி ம.வி.),சி. கம்சிகா-(நாவற்குழி ம.வி.), க.யசிந்தா-(வரணி ம.வி.), இ.சங்கீதா-(வரணி ம.வி.), த.மேனகா- (மிருசுவில் அ.த.க.பாட.), த. மீரா- (மிருசுவில் அ.த. க.பாட.),

க.கஜீபன்-(கைதடி முத்துக்குமாரசாமி ம.வி.),தெ.அஜந்தன்-(கைதடி முத்துக் குமாரசாமி ம.வி.), சி.கம்சிகா -(மட்டுவில் தெற்கு சரஸ்வதி வித்தி.) ர.தவபாலினி-மட்டுவில் தெற்கு சரஸ்வதி வித்தி.).

(202-207)

# இலவசக் கணனிக் கற்கை

வலி.தென் மேற்கு, ஜூன் 7

வலி.கிழக்கு பிரதேச செயலர் பிரிவை சேர்ந்த சிறுப்பிட்டி வடக்கிலுள்ள ''சிற்றி இன்போமெற்றிக் சென்ரர்'' நிறுவனத்தில் இலவச கணனி கற்கை நெறி ஒன்று விரைவில் ஆரம்பமாகவுள்ளது.

இலவசமாகக் கணனி கற்கையை மேற்கொள்ள விரும்புபவர்கள் உடனடியாக நிறுவனத்தினரிடம் தொடர்பு கொண்டு விண்ணப்பிக்க முடியும் என்று தெரிவிக்கப்படுகின்றது. (202-135)

# சுட்டுத்துண்டு இல்லாமல் மென்பானம் விற்றவருக்கு 5 ஆயிரம் அபராதம்

யாழ்ப்பாணம், ஜூன்7

சுட்டுத்துண்டு இல்லாமல் மென்பானம் (சோடா) விற்பனை செய்த கொடிகாமம் வர்த்தகருக்கு சாவகச்சேரி நீதிமன்றில் 5 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

சுட்டுத்துண்டு இல்லாமல் மென்பானம் விற்பனை செய்த வர்த்தகர், அதனை உற்பத்தி செய்த மீசாலையைச் சேர்ந்த உற்பத்தியாளர் ஆகியோருக்கு எதிராக யாழ்.பிராந்திய உணவு மற்றும் மருந்துகள் பரிசோதகரால் சாவகச்சேரி நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

இவ் வழக்கு நேற்று முன்தினம் நீதிமன்றில் விசாரணைக்கு எடுக்கப்பட்டது.

அதன் போது வர்த்தகர் தனது குற்றத்தை ஒப்புக் கொண்டதையடுத்து அவருக்கு 5ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டு தீர்ப்பளிக்கப்பட்டது.

உற்பத்தியாளர் தான் குற்றம் ஏதும் செய்யவில்லை எனவும் சுற்றவாளி எனவும் கூறியதையடுத்து 10 ஆயிரம் ரூபா சரீரப்பிணையில் செல்லுமாறு உத்தரவிடப்பட்டது. (202-207)


**COMPUTER EXPRESS**
Institute of Information Technology
#15, Sirambiyadi Lane, Jaffna.021 222 8250
Branch : 167, Kasthuriyar Rd, Jaffna 0777222422

ஒருவாரகால முழுநேர கற்கைநெறிகள்

*Diploma in Hardware Engineering*
Assembling · Upgrading · Troubleshooting · Fault finding · Repairing · Servicing · Software Installation · Configuring · Networking
Course Fee : 2000/=

*Diploma in Video Editing*
முன்னணி Video Mixing Software களூடாக
Adobe Photoshop · Adobe Premier · Cool3D Studio · Pinnacle Studio · VCD Cutter · Capturing
Course Fee : 3000/=

*Diploma in Graphic Designing*
Adobe Photoshop · Corel DRAW · Cool3D Studio · Micro Media Flash
Course Fee : 2000/=

*Diploma in Quick Books*
பிரபல கணனிக்கணக்கியல் மென்பொருள்
Course Fee : 2000/=

வகுப்புக்கள் ஆரம்பம் : 09/06/2008 09.00AM



**கார் விற்பனைக்கு**

நல்ல நிலையிலுள்ள "2 ஸ்ரீ Ford Prefect" கார் விற்பனைக்குண்டு.

தொடர்பு: இல.608,
கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம்.
T.P.:3665 (75165)


## பரிசுத்த ஆவிக்கு செபம்

எனக்கு ஒளியாக இருந்து உன்னத நிலையை நான் அடைய வழிகாட்டும் பரிசுத்த ஆவியே உமது திருநாமம் அர்ச்சிக்கப்படுவதாக. உமது அருட்கொடைகளின் மூலம் என்னுள்ளத்தைப் பக்குவப்படுத்தி எனக்குத் தீங்கு செய்தோரை நான் மன்னிக்க அருள்புரிபவரே, என் வாழ்வின் எச்சந்தர்ப்பத்திலும் எனக்கு உற்றதுணையான உமக்கு இச்சிறிய செபத்தின் மூலம் நீர் செய்யும் சகலத்திற்கும் நன்றி கூறுகின்றேன்.

என் தேவைகள் எவ்வளவு முக்கியமானதாக இருப்பினும், எக்காரணம் கொண்டும் உம்மில் இருந்து விலகாமல் என்றும் உம்மில் நிலைத்திருப்பேனென உறுதி கூறுகிறேன். நானும் என்னால் நேசிக்கப்படும் அனைவரும் என்றென்றும் உமது முடிவில்லா மகிமையில் பங்கு பெற வேண்டுகின்றேன்.

ஓ பரிசுத்த ஆவியே உமக்கு நன்றி.

(75170) அடியாள்.

## கண்ணீர் அஞ்சலி



எமது அல்லாரை உற்பத்திப் பண்ணை ஆயுட்கால உறுப்பினர்

### அமரர் க.கணேசலிங்கம்

அவர்களின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திப்பதோடு, அவர் தம் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அல்லாரை உற்பத்திப் பண்ணை, நிர்வாகத்தினர்.
அல்லாரை. (75150)

## 31ஆம் நாள் நினைவஞ்சலி

அன்னை மடியில் 22 ★ 11 ★ 1930 — ஆண்டவன் அடியில் 07 ★ 05 ★ 2008



### திருமதி கனகசபை மனோரஞ்சிதம்

திதி: துதியை


வாழ்விற்கோர் விடியலாய் நல்ல வழிகாட்டியாய்
வாழ்வாங்கு வாழ வழிகாட்டிய உத்தமியே!
விண்ணுலக வாழ்விற்கு விரைந்து சென்றதேனோ?
எங்கள் நினைவுகளில் என்றும் நின்று நிழலோடு
நிஜமாக நிற்கும் எங்கள் அன்புத் தெய்வமே!
மாதமொன்றென்ன ஆண்டுகள் பல சென்றாலும்
எங்கள் உயிர் உள்ளவரை உங்கள் நினைவுகள்
எம் நெஞ்சைவிட்டகலாது
விழித்திரையில் நீர்த்திரளாய் உங்கள்
நினைவுகளைச் சுமந்து வாழ்வோம்.

உங்கள் பிரிவால் துயருறும்:
குடும்பத்தினர்.

கரணவாய்,
கரவெட்டி. (75164)

## ஈர விழியில் ஏழாண்டு

மலர்வு 16 ★ 02 ★ 1977 — உதிர்வு 27 ★ 05 ★ 2001



### அமரர் பஞ்சரத்தினம் ஜனார்த்தனன்

*திதி: சதுர்த்தசி (07.06.2008)*

அன்புச் செல்வனே! நீ மீண்டு வருவாய் என
துடித்த இதயங்கள் உன் பாசத்துக்கு ஏங்கிய
உன் தோழர்கள் உன்னை நினைத்து வாழ்ந்த
உன் சொந்தங்கள் உன் வரவிற்காய் காத்திருக்க
உன் எதிர்காலங்கள் எல்லாம் கனவாகிப் போனதடா?
எப்போதும் உன் நினைவுகள் எம் இதயத்தில்.

3/3, பத்திரகாளி கோயிலடி,
வண்.மேற்கு, யாழ்ப்பாணம். (75143)

ஐ.பஞ்சரத்தினம்
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி இன்ரறக்ட் கழகம் வாசிப்பு வாரத்தை ஒட்டி யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி உயர்தர நூலகத்தில் நிகழ்வுகளை நடத்தியது.

இந்நிகழ்வில் கழக அங்கத்தவர்களிடம் இருந்து சேகரிக்கப்பட்ட நூற்றுக்கு மேற்பட்ட நூல்கள் நீர்வேலி காமாட்சி அம்பாள் சனசமூக நிலையத்திற்கு அச்சனசமூக நிலையத் தலைவரிடம் ஒப்படைப்பதை படத்தில் காணலாம்.

## நிர்வாகிகள் தெரிவு

யாழ்ப்பாணம்,ஜூன்7

வல்வெட்டித்துறை கணபதி படிப்பகத்தின் புதிய நிர்வாக குழு தெரிவுசெய்யப்பட்டுள்ளது.

தலைவராக பூ.அகமணிதேவரும் செயலாளராக லோ.நாகராஜனும் பொருளாளராக சி.மதுசூதனனும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். (202)

* * *

யாழ்ப்பாணம்,ஜூன்7

தேசிய இளைஞர் சேவை சம்மேளத்தின் 2008ஆம் ஆண்டுகளுக்கான நிர்வாகக் குழு உத்தியோகத்தர்கள் தெரிவு அண்மையில் இடம்பெற்றது.

பதிவுசெய்யப்பட்ட 13 இளைஞர் கழகத்தினர் கலந்துகொண்ட கூட்டத்தில் இளைஞர் சேவை சம்மேளனத்தின் தலைவராக செல்வன் லோறன்ஸ் பிரதாப்பும், போர் ஸ்ரார் இளைஞர் விளையாட்டுக் கழகம், செயலாளராக திருமதி விஜோதாவும் (விளையாட்டு அலுவலர்), பொருளாளராக எ.சதீஸ்சும் (சென்றோக் கழகம்), அமைப்பாளர்களாக எ.ஜீவன், (அன்ரனிஸ் கழகம்) ஆர்.சி.அபிஷேகன் (போர் ஸ்ரார் கழகம்) ஆகியோர் பொறுப்பேற்றுள்ளனர். (202-302)

* * *

நல்லூர்,ஜூன்7

வேலணை, மண்கும்பான் வெள்ளைப்புற்றடி வீரகத்தி விநாயகர் தேவஸ்தானத்தின் புதிய பரிபாலன சபை உறுப்பினர்கள் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

தலைவராக செ.சிவலோகநாதனும், செயலாளராக ம.மதிவர்மனும், பொருளாளராக ந.தனபாலசிங்கமும் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர். (202-111)

* * *

வடமராட்சி, ஜூன்7

பருத்தித்துறை வேலாயுதம் மகாவித்தியாலய பழைய மாணவர் சங்கத்தின் தலைவராக சட்டத்தரணி சபா.ரவீந்திரன் மீண்டும் தெரிவுசெய்யப்பட்டுள்ளார்.

சங்கத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டம் அண்மையில் நடைபெற்றது.

சங்கத்தின் உபதலைவராக பருத்தித்துறை இலங்கை வங்கிக் கிளை முகாமையாளர் கே.பி.ஆனந்தநடேசனும், செயலாளராக வடமராட்சிக் கல்விவலய விஞ்ஞானச் சங்க ஆலோசகர் கே.குகநாதனும், பொருளாளராக சாவகச்சேரி பிரதேச செயலக சமுர்த்தி முகாமையாளரான கே.நகுலதாசும் தெரிவாகினர். (202-236)

* * *

வலி.தென்மேற்கு,ஜூன்7

பண்டத்தரிப்பு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் கிளைக்குழுத் தேர்தல் கடந்த முதலாம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றபோது 12 கிளைகளில் போட்டி இன்றி ஏகமனதான முறையில் உறுப்பினர் தெரிவு நடைபெற்றது.

மாதகல் பரிஷ் கிளையில் மட்டும் பல உறுப்பினர்கள் போட்டியிட முன்வந்ததால் வாக்கெடுப்பு நடத்தப்பட்டு 9 உறுப்பினர்கள் தெரிவுசெய்யப்பட்டனர்.

கூட்டுறவு திணைக்களத்தினால் நிர்மாணிக்கப்பட்ட தவிசாளர்கள் அந்தந்த கிளைகளில் வைத்து மேற்படி கிளைகளின் உறுப்பினர் தெரிவை நடத்தினர். (202-135)

## கூட்டம்

நல்லூர்,ஜூன்7

மாவட்ட கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், நிகழ்ச்சித் திட்ட உதவியாளர்கள் மகளிர் அபிவிருத்தி நிலைய போதனாசிரியர்களுக்கான கூட்டம் எதிர்வரும் திங்கட்கிழமை காலை 9.30 மணிக்கு மாவட்டச் செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

## மக்கள் முகம்



திருகோணமலை மேல் நீதிமன்றப் பதிவாளராகக் கடமைபுரியும் துரையப்பா சுரேந்திரன் அகில இலங்கை சமாதான நீதிவானாகவும் சத்தியப் பிரமாணம் செய்துள்ளார்.

இவர் வவுனியா, இன்னர் சேக்குலர் லேனைச் சொந்த இடமாகக் கொண்டவர்.

* * *



கோண்டாவில் மேற்கைச் சேர்ந்த சிவபாக்கியம் முத்துக்குமாரசுவாமி பொதுநிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சரால் யாழ்ப்பாணம் நீதிபரிபாலன வலயத்திற்கான பிரசித்த நொத்தாரிசாக நியமிக்கப்பட்டு 09.05.2008 அன்று மேல் நீதிமன்ற நீதிபதி சி.சுவர்ணராஜா முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்துகொண்டார்.

இவர் அகில இலங்கைச் சமாதான நீதிவானும் சத்தியமொழி பெயர்ப்பாளரும் யாழ்ப்பாணம் வடவலய தொழில் திணைக்களத்தின் உதவித்தொழில் ஆணையாளருமாவார்.

* * *

இலங்கை மின்சார சபையின் தென்மராட்சி பிரதேச மின்பாவனையாளர் அலுவலகத்தில் மின் அத்தியட்சராக கடமையாற்றிய வே.சடாச்சரமூர்த்தி அண்மையில் சேவையிலிருந்து ஓய்வு பெற்றுள்ளார்.

* * *

நீர்வேலி சி.சி.த.க. பாடசாலையின் புதிய அதிபராக கு.குகானந்தன் அண்மையில் முதல் கடமையேற்றுள்ளார்.

இவர் இதுவரை காலமும் நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரியில் சிரேஷ்ட ஆசிரியராகக் கடமையாற்றி வந்துள்ளார்.

இதற்கு முன்பு கடமையாற்றிய அதிபர் செ.செல்வநாயகம் ஓய்வுபெற்றதைத் தொடர்ந்து இப்புதிய அதிபர் நியமனம் இடம்பெற்றது.

* * *

வடக்கு மாகாண உள்ளூராட்சித் திணைக்கள நிர்வாக உத்தியோகத்தர் எஸ்.ரவீந்திரன் வடமராட்சி கல்வி வலய நிர்வாக உத்தியோகத்தராகப் பொறுப்பேற்றுள்ளார்.

வடமராட்சி வலயக் கல்வி அலுவலக நிர்வாக உத்தியோகத்தராக பணியாற்றிய திருமதி கே.திருச்செல்வநாயகம் சேவையிலிருந்து இளைப்பாறியதையடுத்து இந் நிர்வாக உத்தியோகத்தர் பதவி வெற்றிடமாகவேவிருந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## வாசகர் திருமுகம்

### பருவகாலச்சீட்டு விதிகளை மதித்து நடக்கவும்

*திரு.ஞா.உதயகுமார் கொடிகாமம் என்ற பயணியினால் கடந்த 29.05.2008 திகதிய வாசகர் திருமுகம் பகுதியில் பிரசுரிக்கப்பட்ட விடயம் தொடர்பான விளக்கம்:* பயணிகளுக்கான பருவகாலச்சீட்டு என்றால் குறிப்பிடப்பட்ட கழிவுகளுடன் பயணிகளின் நன்மை கருதி வழங்கப்படும் ஒரு சீட்டாகும். பருவகாலச் சீட்டை வைத்திருக்கும் ஒருவர் அப்பருவகாலச்சீட்டில் மாறுமிடம் குறிப்பிடப்பட்டிருக்கும் இடத்திலேயே வேறு பேரூந்துக்கு மாறி ஏறலாம் அல்லது அவர் பயணித்த பேரூந்து பழுதடைந்தால் மட்டுமே காப்பாளரது அனுமதியுடன் வேறு பேரூந்தில் பயணிக்கலாம். அதனைவிடுத்து பருவகாலச் சீட்டில் மாறுமிடம் குறிப்பிடப்படாத இடங்களில் மாறி ஏறுவதோ அல்லது பருவகாலச்சீட்டில் குறிப்பிட்ட கட்டணத்திற்கு மேலதிகமான கட்டணத்திற்கு செயலாற்றும் பேரூந்துகளில் பயணிப்பதோ தவறான செயலாகும்.

எனவே பருவகாலச்சீட்டு சம்பந்தமான விதிமுறைகளை மதித்து நடந்தால் சபை ஊழியர்களுக்கும் பொதுமக்களுக்கும் இடையிலான நல்லுறவை பேணிப்பாதுகாக்க முடியும்.

*பிரதேச முகாமையாளர், இ.போ.ச. (வடபிராந்தியம்).*

### சாத்தானை சகித்துக் கொள்வதா?

வாசகர் திருமுகத்தில் ''ஒலிபெருக்கிகளுக்குப் பகுத்தறிவு இல்லை'' என்ற திருமுகத்தை வாசித்தபோது அந்த வாசகர் ஒலிபெருக்கிகளால் எவ்வளவு தூரம் சித்திரவதைப்பட்டிருக்கின்றார் என்று ஊகிக்க முடிகிறது.

ஆனால் இந்த சித்திரவதையைச் சகித்துக் கொள்ளத்தான் வேண்டும் என்பதை சகிக்க முடியவில்லை. அப்படி சகித்துக் கொள்வது நாமே ஒரு பூதத்தை உருவாக்கி அது நம்மையே விழுங்கி விடச் செய்வதாகவே முடியும்.

மக்களை முட்டாள்களாக்கி அவர்களையே விழுங்கி தம் வயிற்றை நிரப்பிக் கொண்ட செயற்பாடுகள் நம் சரித்திரத்திலே உண்டு.

சாத்தானுக்கு வேதம் ஓதி பிரயோசனமில்லை. சாத்தானுக்கு கட்டுப் போடுவதே நல்லது. நம் நீதித்துறையும் காவல்துறையும் ஒலிபெருக்கி என்ற சாத்தானைக் கட்டிப் போட வேண்டும். மக்களை முட்டாள்கள் ஆக்குவதைத் தடுக்க வேண்டும்.

40 டெசிபலுக்கு மேல் சத்தம் போடக்கூடாது என்று சட்டம் உண்டு. மேலும், இந்த ஒலிபெருக்கிகளைத் தடை செய்வது நல்லது.

கரவெட்டி.

*மா. தில்லையம்பலம்.*

### கடவுளை மனிதரிலே காண்பது எப்போது...?

அயலில் யாருக்காவது கைநிறைய வருவாய் உண்டென்றால், யாராவது வெளிநாட்டில் வேலை பார்க்கிறார்கள் என்றால் கோயில் முகாமையாளர் உடனே அவரை அணுகி " அயலில் உள்ள எல்லாக் கோயில்களிலும் திருப்பணி வேலைகள் சிறப்பாக நடைபெறுகின்றன. எங்கள் கோயிலையும் நாங்கள் கட்டியெழுப்பவேண்டும். தாங்கள்தான் உதவ வேண்டும்'' என்று கேட்பார்கள்.

இப்படியே இன்று பழைய கோயில்கள் இடிக்கப்பெற்றுப் புதுக்கோயில்கள், சுற்றுமதில், சுற்றுப்பிரகாரம், இராஜகோபுரம் , சித்திரத் தேர், சப்பரம், திருச்சொரூபம் எனப் புதிய புதிய வேலைப்பாடுகள் குடாநாடெங்கும் நடந்து வருகின்றன.

நமது முன்னோர்களும் இதைத்தான் செய்தார்கள்.

தமிழ் நாட்டிலே ஆயிரம் கோயில்கள் புல ஏக்கர் நிலப்பரப்பில் கல்லைக் குடைந்து கட்டியவை. அழகிய வேலைப்பாடு கொண்ட ஆயிரம் ஆயிரம் தூண்கள், வானளாவிய கோபுரங்கள், தூபிகள்; அப்பப்பா கண்கொள்ளாக் காட்சி.

கல்லிலே கலைவண்ணம் கண்ட தமிழருக்கு - கடவுளைக் கண்டவருக்கு மனிதரிலே கடவுளைக் காணமுடியவில்லை.

அன்றும் இன்றும் அதே நிலைதான். நம் மக்கள், நமது பண்பாடு, சமயம் இலக்கியங்கள், ஆன்ம ஈடேற்றம் பற்றி சிந்தனை அறவே கிடையாது. யார் எப்படி இருந்தாலும் நாம் திருப்பணி என்ற பெயரால் கல், மண் சிமெந் கலவையைப் பெருக்கி பெருந்திருவிழாக்களைக் நடத்தி இன்புறுவோம்! எவ்வளவு பிற்போக்கான சிந்தனை.

நல்லூர்.

*க.மகேசன்.*

### திருநெல்வேலிச் சந்தை மலசலகூடம்

அண்மையில் யாழ்ப்பாணம் விஜயம் செய்த உள்ளூராட்சி ஆணையாளர் பொது மலசலகூடங்களுக்கு 'கொமட்' (COMMODE) பொருத்தும்படி உத்தரவிட்டுச் சென்றுள்ளதாக அறியமுடிகிறது.

'கொமட்' சுகாதாரமற்றது. அதிலும் பொதுமலசல கூடங்களில் கொமட்டைப் பொருத்தும்போது பல தொற்றுநோய்கள் பரவுவதற்கான வாய்ப்புகள் அதிகம்.

குறிப்பாக கொமட்டைப் பாவிக்கும்போது கால் கொமட்டில் படும்படியாகவே அமர வேண்டும்.

ஏற்கனவே சிறுநீர் கழித்தவர்களின் சிறுநீர் கொமட்டில் படிந்திருக்கும். சிலவேளைகளில் சிலர் கொமட்டின் மேல் மலம் கழித்தவிட்டுச் செல்லும் சம்பவங்களும் நடைபெறுகின்றன.

அத்துடன் கொமட் பொருத்தப்பட்டால் பைப்லைன், நீர் வசதி என்பன ஒழுங்காக இருக்க வேண்டும்

யாழ்ப்பாணத்தைப் பொறுத்தமட்டில் பொது இடங்களில் "கொமட்" பாவனை சாத்தியமற்றது; சுகாதாரமற்றது என்பதை அதிகாரிகள் கவனத்திலெடுப்பார்களா?

திருநெல்வேலி.

*ச. தியாகராசா.*

### எல்லோருமே இப்படி இருந்தால்..!

நான் கடந்த 3 வருடங்களாக 751 இலக்க பஸ்ஸில் பயணம் செய்துகொண்டுதான் இருக்கிறேன். பஸ் நடத்துநரும் சரி , வாகன ஓட்டுநர்களும் சரி மிகவும் பொறுமையுடனும் நிதானமாகவும் பயணிகளுடன் தத்தம் பணிகளைச் சரியாகச் செய்கின்றனர். இடையிடையே வரும் இடைநிறுத்தங்களிலும் மக்களை எற்றி இறக்கிச் செல்வதும் சரியாக உள்ளது. மக்களும் யாழ்ப்பாணம்-பருத்தித்துறை வரை எவ்வித சிரமமும் இன்றி பயணம் செய்யக்கூடியதை அவதானிக்கமுடிகின்றது.

என்னைப் போன்றே பருவகாலச்சீட்டுடன் பயணம் செய்யும் அனைத்து மாணவர்களும் உத்தியோகத்தர்களும் பருவகாலச்சீட்டைவெட்டிவிட்டுத்தான் செல்கின்றனர். எனவே, மக்களும் பஸ்ஸில் பொறுப்புடனும் அக்கறையுடனும் செயற்படுவதாலும்தான் 751 பஸ்ஸில் எவ்வித இடையூறும் ஏற்படக்கூடிய வாய்ப்புக்கள் மிகவும் அரிதாகவே காணப்படுகின்றன. இதேபோல் மென்மேலும் சேவைகள் தொடர வேண்டும் என மனமார வாழ்த்துகிறேன்.

வல்வெட்டித்துறை.

*கோபிசங்கர் நளினா.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வளர்ச்சிகண்ட கல்வி நிலை தளர்ந்துவிட அனுமதிக்கலாகாது

## வறிய மாணவரை ஊக்குவிக்கும் நிகழ்வில் கல்விப்பணிப்பாளர்

யாழ்ப்பாணம், ஜூன்.7

வளர்ச்சி கண்டிருந்த நமது கல்வி நிலை அண்மைக்காலமாக அதன் வளர்ச்சி தடுமாறும் நிலையில் காணப்படுகிறது. இன்றைய நெருக்கடியான கால கட்டத்தில் உணவுத் தேவைக்கு உழைப்பதற்கே பெற்றோர்கள் முன்னுரிமை கொடுத்து செயற்படுவதால் மாணவர்கள் தமது கல்வி முயற்சியினை தளர்த்த வேண்டிய இக்கட்டான நிலைக்குள்ளாகி அவர்களது மனோநிலையும் பாதிக்கப்படுவதாக உள்ளது.

இந் நிலையினை உணர்ந்த பிரதேச சமுர்த்தி சமூக அபிவிருத்தி மன்றத்தினர் கல்வியில் ஆர்வமிருந்தும் வறுமை காரணமாக கல்வியை இடை நிறுத்த முயன்ற மாணவர்களை ஊக்குவிக்கும் செயற்பாட்டில் ஈடுபட்டுள்ளமை பாராட்டத்தக்கது.

எமது பாரம்பரிய சொத்தான கல்வியினை தாழ்ந்து விடாது மாணவர்களை உயர்த்தி விட ஊக்குவிப்பு பணியினை அனைவரும் மேற்கொள்ள வேண்டும்.

இவ்வாறு தென்மராட்சி பிரதேச சமுர்த்தி சமூக அபிவிருத்தி மன்றத்தினரால் நடத்தப்பட்ட வறிய மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் மற்றும் புலமைப்பரிசில் வழங்கும் நிகழ்வில் முதன்மை விருந்தினராக் கலந்து கொண்ட தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் கு. பிரேமகாந்தன் உரையாற்றுகையில் கூறினார்.

பிரதேச செயலர் செ.ஸ்ரீனிவாசன் தலைமையில் இந் நிகழ்வுநடைபெற்றது. இதில் அவர் மேலும் உரையாற்றுகையில்:-

பிரதேசத்தில் வறுமை காரணமாக பல குடும்பங்கள் பல் வேறு தேவைகளுக் காக இந்த மன்றம் வருடாந்தம் உதவிகளைமேற்கொண்டு வந்துள்ளதாக தெரியவந்துள்ளது. அந்த வகையில் இந்த வருடம் பிரதேசத்தில் உள்ள வறிய மாணவர்களுக்கு உதவிகளை வழங்க முன்வந்தமை பாராட்டற்குரியது. கொடிது கொடிது வறுமை கொடிது அதனிலும் கொடிது இளமையில் வறுமை என ஒளவை மூதாட்டியின் கூற்றினை இன்று நாம் கண்கூடாகக் காண்கின்றோம். வறுமை காரணமாக கல்வியினை மாணவர்கள் இழப்பதனை நாம் ஒருபோதும் அனுமதிக்கக் கூடாது.

புகைத்தல் எதிர்ப்பு தினத்தையொட்டி கடந்த வருடம் சேகரிக்கப்பட்ட நிதியில் வறிய மாணவர்களுக்கு உதவி வழங்கும் திட்டத்தினை மன்றத்தினர் பயன்படுத்தியுள்ளதாக அறிய முடிந்தது.

பிரதேச சமுர்த்தி சமூக அபிவிருத்தி மன்றத்தினரின் இத் திட்டத்தினை நாம் ஊக்குவிப் போமானால் மேலும் பல மாணவர்கள் மன்றத்தின் உதவியினைப் பெறவாய்ப்புக் கிடைக்கும்-என்றார்.


இந்தியாவில் படியுங்கள்
பிருந்தாவன் கல்லூரி
பங்களூர் பல்கலைக் கழகத்துடன் இணைந்தது!
B.Sc. B.B.M. B.C.A. B.Com.
Join With 2 A/L Passes
Courses to Commence in July
Fix an appoinment for interview
Contact: 0777-317043
Company Secretarial Services (Pvt) Ltd
285C 1/1, Stanley Tillakaratne Mawatha,
Jubilee Post, Nugegoda.

அழகுக்கலை பயிற்சி வகுப்புகள்
பிரிவு II ஆரம்பமாகிறது
அழகுக் கலையில் நீங்கள் 3 மாத சான்றிதழ் பயிற்சி பெற குறிப்பிட்ட பயிற்சியாளரே பயிற்றுவிக்க இருப்பதால் பதிவுக்கு முந்துங்கள்.
பதிவுகள்: 09.06. 2008இற்கு முன்
பயிற்சி ஆரம்பம்: 09.06.2008 காலை 9.00 மணி
பயிற்சிகள்
கூந்தல் அலங்காரம் (HAIR STYLE)
ஆடைஅலங்காரம் (DRESSING)
முக அலங்காரம் (FACIAL)
கேக் ஐசிங் (CAKE ICEING)
தையல் பயிற்சி (TAILORING)
அழகுக் கலை பயிற்சியில் சான்றிதழ் பெற பயிற்சிக்கு முந்துங்கள்.

கலைமகள் கலையகம்,
பிரதான வீதி [வஸ்தியன் சந்தி],
யாழ்ப்பாணம்.
(சி/553147)



### பணியாளர் தேவை

யாழ்.போதனா வைத்தியசாலை விடுதி இல.26இல் உதவியாளர் பணிக்கு ஒருவர் தற்காலிகமாகத் தேவை.

கல்வித்தகைமை:
1. க.பொ.த.(சாதாரணம்) சித்தி
2. ஆங்கிலம் வாசிக்கத் தெரிந்திருத்தல்
3. வயது 20-40 இற்குள்

சம்பளம்: ரூபா 5000.00 மட்டும்

சுயவிவரத்துடன் செயலாளர், யாழ்.போதனா வைத்தியசாலை அபிவிருத்திச் சங்கம், யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு எதிர்வரும் 14.06.2008இற்கு முன்னதாக விண்ணப்பிக்கவும்.

தலைவர்,
யாழ்.போதனா வைத்தியசாலை அபிவிருத்திச் சங்கம்.
(75163)


### கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலை ஆசிரியை திருமதி கீதா ஆரூரன் அவர்களின் அன்புத் தந்தை

**அமரர் மாணிக்கம் இலிங்கப்பிள்ளை**

அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தின் துயரில் நாமும் பங்குபற்றுவதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய நாமும் பிரார்த்திக்கின்றோம்.

யா/முத்துத்தம்பி மகா வித்தியாலயம்.
பாடசாலைச் சமூகம்.
(75172)

### 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

தோற்றம் 01 ★ 03 ★ 1942



மறைவு 08 ★ 05 ★ 2008

**அமரர் கனகசபை கணேசலிங்கம்**

திதி: பூர்வபக்க சதுர்த்தி

அன்பின் உறைவிடமே! பாசத்தின் திருவிளக்கே!
அன்பால் எமை அரவணைத்து
பண்பால் பலர் போற்ற வாழ்ந்த உத்தமரே!
என்றும் கனிவான முகமும் எதற்கும்
கலங்காத உள்ளமும் கொண்ட எங்கள் பாசக் கடலே!
எங்குதான் சென்றீர்கள் எமையெல்லாம் ஏங்கவிட்டு?

கடந்த (08.05.2008) அன்று சிவபதமடைந்த எங்கள் அன்புத் தெய்வம் கனகசபை கணேசலிங்கம் அவர்களின் 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்தி நிகழ்வும் இன்று (07.06.2008) சனிக்கிழமை முற்பகல் 11 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறவுள்ளது. அத்தருணம் தாங்கள் வருகை தந்து அவரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்வுகளிலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

அல்லாரை வடக்கு,
கொடிகாமம்.
(சி/553151)
குடும்பத்தினர்.


### தவறிவிட்டது

அசையாமணி அஜந்தன் என்பவருடைய தே.அ.அட்டை(8909937104Vதொண்டைமனாறு முகவரியுடையது). 01.06.2008 அன்று நீராவியடிக்கும் யாழ்.நகருக்குமிடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தொடர்பு கொள்ளவும்.
தொடர்பு:-ஜூலிலன் வீடியோ சென்ரர்
424, K.K.S. வீதி, யாழ்ப்பாணம்.
[பண்டிக்கோட்டுப் பிள்ளையார் முன்பாக]. 0774276249

### இறைச்சிக் கோழி விற்பனை

புறொயிலர் , கல்பேட் தினமும் சுத்தம் செய்து குறைந்த விலையில் பெற்றுக் கொள்ளலாம்.
நல்லூர் பாம் சென்ரர்
19, முருகேசர் லேன், நல்லூர்.
(75132)

### லொறி விற்பனைக்கு

லங்கா அசோக் லேலண்ட் COMET 1109 2005ஆம் ஆண்டு உற்பத்தி, ஒரே உரிமையாளர், குறைந்த பாவனை.
தொடர்புகளுக்கு:
0715310887, 021-222 2515
(75152)

### அருள்முருகன் திருமணப் பணியகம்

நீங்கள் எதிர்பார்க்கும் மணமக்கள் எத்தகையவராயினும் இங்குள்ள அதிகளவிலான மணமக்களிலோ தொடர்ந்து வருகின்ற மணமக்களிலோ இருப்பார்கள். ஒவ்வொருவரதும் திருமணத்திற்குப் பின்னரான வாழ்க்கைக்கே இங்கு முக்கியமளிக்கப்படுவதுடன், எந்வொரு திருமண சேவையிலும் எதிர்பார்க்கவே முடியாத மிகப் பெரும் சலுகையும் வழங்கப்படுகின்றது. முன்னறிவித்தலுடன் வருவது வசதியானது. T.P: 222 9334 03,யாழ். வீதி (பெருமாள் கோயிலடி), யாழ்ப்பாணம் (அழைப்பு இரவு 9 மணிவரை). (75167)

### தையல்க்காரர் தேவை

பிரபல்யம் வாய்ந்த தையல் நிலையம் ஒன்றிற்கு ஆண் வேலையாள் தேவை. அனுபவம் வாய்ந்தவர்கள் விரும்பத்தக்கது. சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.
தொடர்பு:- சுபாஸ் ரெயிலர்ஸ்
பலாலி வீதி, உரும்பிராய்.
[இந்துக்கல்லூரி மைதானத்திற்கு அருகில்].
(75161) 0776391346

### இந்தியாவில் உயர்கல்வி

இந்தியாவில் படித்த மாணவர்களால் பெங்களூர், தமிழ்நாட்டு பல்கலைக்கழகக் கல்லூரிகளில் மிகக் குறைந்த செலவில் பட்டப்படிப்பு படிப்பதற்கான இலவச வழிகாட்டல் கருத்தரங்கும், கல்லூரி பதிவும் சனி, ஞாயிறு காலை 10 மணிக்கு நடத்தப்படுகிறது. மாணவர்கள் பயிற்சிக் கட்டணம் எதுவும் இங்கு செலுத்தத் தேவையில்லை. தகைமை A/L 3 Pass. நீங்கள் விரும்பிய கல்லூரிகளை தெரிவு செய்ய உடன் தொடர்பு கொள்ளவும்.
விண்ணப்ப முடிவு திகதி: 25.06.2008
(75149)
STUDY IN INDIA



### ஹற்றன் நஷனல் வங்கி
அடகுப் பொருள்களை ஏல விற்பனைக்கான

### அறிவித்தல்

ஹற்றன் நஷனல் வங்கி யாழ்ப்பாணம், சுன்னாகம், நெல்லியடி, ஸ்ரான்லி வீதி, மானிப்பாய் ஆகிய கிளைகளில் 31.03.2007 இற்கு முன்னர் அடகு வைத்து இதுவரை மீட்கப்படாத, காலாவதித் திகதியை நீடிக்க ஆவண செய்யாத வாடிக்கையாளரின் அடகுநகைகள் 14.06.2008 சனிக்கிழமை காலை 9.00 மணிக்கு இல. 212, 214 ஆஸ்பத்திரி வீதியில் அமைந்துள்ள யாழ். கிளையில் ஏலத்தில் விடப்படும் என்பதை அறியத்தருகின்றோம்.

உங்களின் பெறுமதி மிக்க பொருள்களை
உடனே மீட்க முடியாவிட்டால் ...........

★கடனுக்குரிய வட்டியையும் கடனின் ஒரு பகுதியையும் (ரூபா.500) செலுத்தி

அல்லது

★தற்போதைய சந்தைப் பெறுமதிக்கும் அதிகரித்த கடன் தொகைக்கும் ஏற்ப உங்கள் அடகுப் பொருள்களை மீள் அடகு வைத்து காலாவதித் திகதியை நீடித்துக் கொள்ளலாம்.

ஏல விற்பனைத் திகதியினை பிற்போடும் மற்றும் ஏலத்தினை இரத்துச் செய்யும் உரிமைகள் வங்கிக்கு உண்டு.

(சி/553148)
ஹற்றன் நஷனல் வங்கி.


### நீங்கா நினைவுடன் மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி

அன்னை அணைப்பில் 29 ★ 10 ★ 1990



இறைவன் இணைப்பில் 07 ★ 06 ★ 2005

**செல்வி கார்த்திகாயினி இராசேந்திரம்**
(கார்த்தி)

[கோ/இராமகிருஷ்ண வித்தியாலய தரம்-10 மாணவி]

திதி: பிரதமை

எமது குல ஒளி விளக்கே!
ஆண்டுகள் மூன்று சென்றதம்மா- எம்மை
நீர் விட்டுப் பிரிந்து
ஆறவில்லை எம் துயர்
உமது நினைவில் நித்தம் வாழ்கின்றோம்.
ஆத்ம சாந்திக்காக இறைவனை வேண்டுகின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

"திருநெல்வேலி ஸ்ரோர்ஸ்"
பலாலி வீதி, திருநெல்வேலி.
உமது பிரிவால் ஏங்கும்:
அன்புப் பெற்றோர் திரு.திருமதி இராசேந்திரம்.
(75171)

### 31ஆம் நாள் அந்தியேட்டி அழைப்பும் நன்றி நவிலலும்

தோற்றம் 02 ★ 08 ★ 1938



மறைவு 08 ★ 05 ★ 2008

**அமரர் செல்லத்துரை பாலசுப்பிரமணியம்**

08.05.2008 வியாழக்கிழமை அன்று சிவபதமடைந்த எங்கள் அன்புத் தெய்வத்தின் இறுதிக்கிரியைகளில் கலந்து கொண்டோருக்கும், அனுதாபங்களைத் தெரிவித்தோருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவிப்பதோடு, இன்று (07.06.2008) சனிக்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெறவுள்ள ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

555/7,மதவடி ஒழுங்கை,
கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.
தோ.பே.: 0777 741117
தகவல்:
குடும்பத்தினர்.
(75174)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

# சிறுபான்மை இனத்தவர்கள் ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு

இன வன்முறைகளால் கொதித்துப்போய் இருக்கின்றது கிழக்கு.

மொழியாலும் வாழிட மரபுகளாலும் ஒன்றி, தமக்குள் அந்நியோன்னியமாக பல நூற்றாண்டுகளாக இணைந்து ஐக்கியமாகி வாழ்ந்துவந்த தமிழர்களுக்கும் முஸ்லிம்களுக்கும் இடையில் இன்று பெரும் முறுகல் நிலைமை.

சிறுபான்மை இனங்களை மோதவிட்டு, அவற்றின் வலுவை நலிவுறச் செய்த திருப்தியில், அந்த முரண்பாட்டைக் கைகொட்டிப் பார்த்து மகிழ்ந்து சிரிக்கிறது பெரும்பான்மை பேரினவாதம்.

எதை இலக்கு வைத்துத் தான் காய்களை நகர்த்தியதோ, அந்த நோக்கு நிறைவேறிய திருப்தி இன்று பேரினவாதத்துக்கு.

கிழக்கைப் பொறுத்தவரை அந்தப் பூமியைத் தமது வரலாற்றுத் தாயகமாகக் கொண்ட தமிழர்களுக்கும் முஸ்லிம்களுக்கும் பொதுவான ஒரு பிரச்சினை இருந்து வந்தது.

அரச பின்புலத்தில் திட்டமிட்டு நடைபெறும் சிங்களக் குடியேற்றம் தமிழர்களின் தாயகத்தையும் முஸ்லிம்களின் பாரம்பரிய பூமியையும் கபளீகரம் செய்து வந்தது. இந்தத் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றம் என்ற பொது எதிரியை எதிர்கொள்வதற்காகவும் -

தங்களது தாயக மண் மீதான உரிமையையும் கௌரவ வாழ்வுக்கான சுயாட்சியையும் உறுதிப்படுத்துவதற்காகவும் -

போராட வேண்டியவர்களாகத் தமிழர்களும் முஸ்லிம்களும் இருக்கின்றார்கள்.

பேரினவாத மேலாதிக்கத்துக்கு எதிரான இந்தப் போராட்டத்தில் தமிழர்களும், முஸ்லிம்களும் பொது இலக்கு மற்றும் பொது எதிரி கருதி ஒன்றிணைவார்களேயானால் அது அடக்குமுறை ஆட்சியாளர்களுக்கு - மேலாதிக்க அதிகாரத்துக்கு - தாங்க முடியாத தலையிடியை, நெருக்குவாரத்தைக் கொடுத்துவிடும்.

அதுவும் தமிழர்களின் உரிமைக்கான போராட்டம் எழுச்சி கொண்டு தீவிரம் பெற்ற நிலையில் அதற்கு முகம் கொடுக்க முடியாது அல்லாடும் சிங்களம், மறுபுறம் சிறுபான்மையினரில் சிறுபான்மையினரான முஸ்லிம்களும் அதே தீவிரத்தோடு கொதித்தெழுந்தால் - உரிமைகளுக்காகக் கிளர்ந்தால் - அது தனக்கு எதிர்கொள்ளவே முடியாத பெரும் சிக்கலாகிவிடும் என்பதை உணர்ந்துள்ளது.

அதனால் சிறுபான்மை இனங்களை அவற்றிடையே மோதவிட்டு, அந்த வன்முறைத் தீயில் தான் குளிர்காய அது கருதியது.

அதற்காக எண்ணெய் ஊற்றி வளர்த்து விடப்பட்ட இன முரண்பாட்டுத் தீ இன்று கிழக்கில் கொழுந்துவிட்டு எரிகிறது.

'குரங்கு அப்பம் பகிர்ந்த கதையாக' தமிழரும் முஸ்லிம்களும் கிழக்கில் தமக்குள் மோதி அழிந்து கொண்டிருக்க, அதிகாரத்தில் இருக்கும் சிங்களம் சத்தம் சந்தடியின்றி திட்டமிட்ட குடியேற்றம் என்ற தனது கைவரிசையைச் செவ்வனே காட்டிவிடும்.

வடக்கிலிருந்து, கிழக்கை நிர்வாக ரீதியாகப் பிரித்ததும் -

கிழக்கிலே யுத்த முழக்கங்கள் அடங்கு முன்னரே இவ்வளவு அவசரப்பட்டு மாகாணத் தேர்தலை நடத்தியதும் -

அந்தத் தேர்தலை ஒட்டித் தமிழர்களுக்கும் முஸ்லிம்களுக்கும் இடையே அதிகாரப் போட்டியைத் தூண்டிவிட்டுத் தீவிரமடையச் செய்யும் விதத்தில் அரசியல் காய் நகர்த்தல்களை அரசுத் தரப்பு மேற்கொண்டதும் -

தனது துணைப்படைக்குழுவான ஒரு தரப்புக்கு ஆயுதங்களை வழங்கி, அது புரியும் அராஜக அத்துமீறலுக்கு ஆசீர்வாதம் அளித்து ஒதுங்கி நின்று - பார்த்துக்கொண்டு வாளாதிருப்பதும்-

தமிழர் - முஸ்லிம் முறுகலை உச்சக்கட்டத்தை அடைய வைக்கச் செய்யும் குள்ள நரித் தந்திரோபாயத்துடன்தான்.

அரசுத் தலைமை புரியும் இந்தத் திருகுதாள கபட உள்நோக்கத்தின் தாற்பரியம் புரியாமல் - தங்களின் பொது எதிரி யார் என்பதை உணராமல் - இந்த இலங்கைத் தீவின் முக்கிய சிறுபான்மை இனங்களான தமிழர்களும் முஸ்லிம்களும் தங்களுக்குள் மோதிக்கொண்டிருக்கின்றார்கள்.

சிறுபான்மையினரைப் பிரித்தாளும் பேரினவாதத்தின் இந்த சூழ்ச்சிக்கு சிறுபான்மை இனத்தவர்கள் இலகுவாகப் பலிக்கடாவாகித் தங்களை மறந்து தங்களுக்குள் மோதிக் கொள்வதை சிறுபான்மையினரின் தலைவிதியன்றி வேறு ஏன்னவென்று கூறுவது?

இப்போது கிழக்கில் வெடித்திருக்கும் வன்முறை இந்த அரசுத் தலைமையின் விதைப்பு வேலை என்பதைத் தமிழர்களின் முக்கிய தரப்புகளும், முஸ்லிம்களின் முக்கிய தலைமைகளும் வெளிப்படையாகவே சுட்டிக்காட்டிவிட்டன.

வழமையாகவே பேரினவாதப் போக்கில் செயற்படும் ஜே.வி.பி. கூட கிழக்கில் தமிழர், முஸ்லிம்களிடையே வெடித்துள்ள இனக்கலவரம் அரசுத் தலைமையின் திட்டமிட்ட தூண்டல் சதியால் உருவான துன்பியல் நிகழ்வு என்பதை அப்பட்டமாக வெளிப்படுத்தி விட்டது.

இப்படி ஜே.வி.பி. மற்றும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், ஐக்கிய தேசியக் கட்சி, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு போன்ற பிரதான அரசியல் கட்சிகள் எல்லாம் கிழக்கு வன்முறைக்குக் களமும், சூழலும், ஏது நிலையும் ஏற்படுத்திக் கொடுத்தவை அரசுத் தலைமையின் காய் நகர்த்தல்கள் தாம் என்று வெளிப்படுத்திய பின்னரும் -

அத்தகைய காய் நகர்த்தல்களின் பின்னால் உள்ள பேரினவாதத்தின் உள்நோக்கங்கள் பற்றித் தெளிவாகப் புரிந்து கொண்ட பின்னரும் -

கிழக்கு நிலைமையை சிறுபான்மை இனங்களுக்கு இடையிலான இன வன்முறைக்கும், கலவரத்துக்கும் உரிய களமாகத் தமிழர்களும் முஸ்லிம்களும் கருதிச் செயற்படுவது முழு முட்டாள்தனமன்றி வேறில்லை.

சிறுபான்மை இனங்கள், தமக்குள் பதவிக் கதிரைக்காகவும், அரசியல் அதிகாரத்துக்காகவும் ஆளும் தரப்பின் அடிவருடிகளாகியிருக்கும் தலைவர்களை அடையாளம் கண்டு, அவர்களைப் புறமொதுக்கிவிட்டு -

அவர்களின் தூண்டுதலில் இன முரண்பாட்டு மோதலில் இறங்குவதை அடியோடு நிராகரித்துவிட்டு -

தங்களுக்குள் ஐக்கியப்பட்டுச் செயற்பட்டாலேயே, சிறுபான்மை இனங்களை அடக்கி ஆள முற்படும் பேரினவாதத்துக்கு சரியான சவாலாக நின்று தங்கள் காரியத்தைச் சாதிக்க முடியும்.

இதைப் புரிந்து கொள்வார்களா அவர்கள்? இன்று தொடக்கமாவது ஐக்கியப்படுவது குறித்தும் ஒன்றிணைந்து உரிமைக் காக்க் குரல் எழுப்புவது குறித்தும் சிந்திப்பார்களா?

சிறுபான்மை இனத்தவரைப் பொறுத்தவரை 'ஒன்று பட்டால்தான் உண்டு வாழ்வு!'

# தன்னை நாடாளுமன்றம் செல்லவிடாது தடுக்க முயற்சி என ரணில் முறைப்பாடு

## சபையில் சிறப்புரிமைப் பிரச்சினையைக் கிளப்பினார்

கொழும்பு,ஜூன் 7

எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க நேற்றுமுன்தினம் நாடாளுமன்றம் நோக்கி வந்துகொண்டிருந்த போது சிலர் இரண்டு இடங்களில் வாகனங்களை வீதிக்குக் குறுக்கே விட்டு நாடாளுமன்றம் செல்லவிடாமல் அவரைத் தடுத்தனர்.

இது தொடர்பாக ரணில் விக்கிரமசிங்க சபாநாயகரிடம் முறையிட்டுள்ளார்.

இதன்மூலம் தமது சிறப்புரிமை மீறப்பட்டுள்ளது என்றும், சம்பந்தப்பட்டவர்களைக் கைது செய்ய நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் ரணில் கூறினார்.

இது தொடர்பாக அவர் மேலும் கூறியவை வருமாறு:-

இன்று (நேற்றுமுன்தினம்) காலை நாடாளுமன்ற அமர்வில் கலந்துகொள்வதற்காக நான் நாடாளுமன்றம் நோக்கி வந்துகொண்டிருந்தேன்.

அப்போது வரும் வழியில் சிலர் இரண்டு இடங்களில் எனது வாகனத்துக்குக் குறுக்கே வாகனங்களை நிறுத்தி என்னை வழிமறித்தனர்.

இச்செயற்பாடுகள் மூலம் எனது நாடாளுமன்ற சிறப்புரிமையும் அடிப்படை உரிமையும் மீறப்பட்டுள்ளன.

எனக்கு எதிர்ப்புத் தெரிவிக்க வேண்டும் என்றால் சுவரொட்டிகள் ஒட்டி எதிர்ப்புத் தெரிவிக்கலாம். ஆனால், நாடாளுமன்ற அமர்வில் கலந்துகொள்ளும் எனது உரிமையை இவ்வாறான செயற்பாடுகள் மூலம் தடுக்க முடியாது.

இதில் ஈடுபட்டவர்களை எனக்குத் தெரியும். இந்த நடவடிக்கை மூலம் எனது சிறப்புரிமை மீறப்பட்டுள்ளது - என்றார்.

இது தொடர்பாக தாம் நடவடிக்கை எடுப்பார் என்று சபாநாயகர் பதில் அளித்தார். நாடாளுமன்ற அமர்வில் கலந்து கொள்ளும் உறுப்பினர் ஒருவரின் உரிமையை எவராலும் தடுக்கமுடியாது என்றும் அவர் சொன்னார். (சி)

# குடாநாட்டில் மணலின் விலை நிர்ணயிக்கப்படும்: ஏனைய பகுதிகளில் அனுமதியின்றி மணல் அகழ்வதற்கும் தடை!

## அமைச்சர் டக்ளஸ் நடவடிக்கை

குடாநாட்டில் மணலின் விலை மிகவும் அதிகரித்துள்ளதாகப் பலரும் சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிடம் முறைப்பாடுகளை முன்வைத்துள்ளதையடுத்து, மணல் அகழ்வு மற்றும் அதன் விநியோகம் தொடர்பில் அமைச்சர் உயர்மட்ட மாநாடொன்றைக் கூட்டி பல்வேறு தீர்மானங்களை எடுத்துள்ளார்.இதன்போது அனுமதிக்கப்பட் டுள்ள மணல் அகழ்வு மற்றும் மணல் விநியோகம் தொடர்பில் இனங்காணப் பட்டுள்ள பிரச்சினைகளுக்கு உடனடித் தீர்வுகள் எட்டப்பட்டுள்ளன.

இதன் பிரகாரம் காலை 9 மணி முதல் பிற்பகல் 2 மணிவரை நடைமுறையில் இருந்து வந்த மணல் அகழ்வு செயற்பாடுகளுக்கான காலத்தை காலை 5 மணிமுதல் மாலை 5 மணிவரை நீடிப்பதற்குநடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

மணல் அகழ்வு நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்ற உழவு இயந்திரங்களுக்கான கட்டணத்தை 900/= ரூபாவாக அதிகரிப்பதற்கும் உழவு இயந்திரங்களுக்கான உதிரிப்பாகங்களை கொழும்பில் இருந்து கொள்வனவு செய்வதற்கு இலகுகடன் வசதிகளை வழங்குவதற்கும், ஒரு தினத்திற்கு 500 உழவு இயந்திரங்களில் மணல் திட்டுகளில் இருந்து குடாத்தனைக்கு மணல் கொண்டு வருவதற்கும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

இதேவேளை குடாநாட்டில் மணலுக்கான விலை வெகுவிரைவில் நிர்ணயிக்கப்பட உள்ளதுடன் அனுமதிக்கப்பட்டுள்ள மணற்காடு மணற்திட்டுகளைத் தவிர்ந்த ஏனைய பகுதிகளில் மணல் அகழ்விற்குத் தடை விதிக்கவும் அமைச்சர் நடவடிக்கை எடுத்துள்ளார். இதன்மூலம் குடாநாட்டில் இயற்கை அழிவுகளைத் தடுக்கவும் கள்ளச் சந்தையில் அதிக விலையில் மணல் விநியோகங்களை மேற்கொள்வதைத் தடுக்கவும் இயலுமென அமைச்சர் தெரிவித்தார். அதேநேரம் அனுமதிக்கப்பட்டுள்ள மணல் திட்டுகளில் ஒழுங்கு முறையில் மணல் அகழ்வு நடவடிக் கைகள் மேற்கொள்ளப்படுகின்றனவா என்பதை அறிய இரு மாதங்களுக்கொரு முறை சோதனை நடவடிக் கைகளை மேற்கொள்ளவும் அமைச்சர் உரிய அதிகாரிகளுக்குப் பணிப்புரை வழங்கியுள்ளார்.

மேற்படி சந்திப்பில் அரச அதிபர், உதவி அரசாங்க அதிபர், கிராமசேவையாளர், மணற்காடு பகுதிக்குப் பொறுப்பான பாதுகாப்புத் தரப்பு உயரதிகாரி, மணற்காட்டுப் பகுதி மக்கள் அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அமைச்சு அதிகாரிகளும் கலந்துகொண்டனர்.

# 'கோப்சிற்றி' திறப்பு விழா

வலி.தென்மேற்கு, ஜூன் 7

பண்டத்தரிப்பு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் புதிதாக நிர்மாணித்துள்ள 'கோப்சிற்றி' விற்பனை நிலையத்தின் திறப்பு விழா நாளை மறுதினம் மு.ப. 10 மணிக்கு நடைபெறவுள்ளது.

சங்கத் தலைவர் ச.செல்வரட்ணம் தலைமையில் நடைபெறும் இவ் விழாவில் பிரதம அதிதியாக வலி.தென். மேற்கு (சண்டிலிப்பாய்) பிரதேச செயலர் திருமதி ரூபினி வரதலிங்கம் கலந்து கொண்டு 'கோப்சிற்றி' கூடத்தை திறந்து வைப்பார்.

இவ் விழாவில் சிறப்பு விருந்தினர்களாக யாழ்.கூட்டுறவு உதவி ஆணையாளர் பொ.சிவலிங்கம், யாழ்.கூட்டுறவு உதவி ஆணையாளர் (எண்பார்வை) செ.கனகசபாபதி, வலி.தென்மேற்கு (மானிப்பாய்) பிரதேச சபைச் செயலர் திருமதி பு.சிவலிங்கம் ஆகியோர் கலந்து கொள்வர். (202-135)

# சூட்டுச் சம்பவத்தில் சிப்பாய் பலி

யாழ்ப்பாணம்,ஜூன் 7

சாவகச்சேரி, தனங்கிளப்பு முன்னணிக் காவலரண் ஒன்றில் இடம்பெற்ற சூட்டுச் சம்பவத்தில் சிப்பாய் ஒருவர் பலியானார். நேற்றுக் காலை 6 மணியளவில் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் டி.எம்.எஸ். திசாநாயக்கா என்ற சிப்பாயே பலியா னவர் ஆவார்.

காவலரணில் கடமையில் இருந்த சக சிப்பாய் ஒருவரே அவரைச் சுட்டுக் கொன்றதாக விசாரணைகளில் தெரிவிக்கப்பட்டது. மரண விசாரணைகளை சாவகச்சேரி நீதிவான் மேற்கொண்டார். (202-207)

## நாளை

| | |
|---|---|
| வைகாசி 26 | 08.06.2008 |
| | ஞாயிற்றுக்கிழமை |
| திதி: | பஞ்சமி |
| | பி.ப.03.41 வரை |
| நட்சத்திரம் : | ஆயிலியம் |
| | பி.இ. 02.26 வரை |
| சுபநேரம் : | 08.57 - 10.27 |
| ராகுகாலம் : | 04.22 - 05.52 |

# மட்டக்களப்பு தேர்தல் முடிவை ஆட்சேபித்து மனுத் தாக்கல்

கொழும்பு,ஜூன் 7

கிழக்கு மாகாண சபைக்காக மட்டக்களப்பு மாவட்டத்தில் இடம் பெற்ற தேர்தல்களில் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகளின் கட்சியினர் மேற்கொண்ட வன்முறைகள் தேர்தல் முறைகளைப் பாதிக்கும் விதத்தில் அமைந்திருந்தமையால் அந்தத் தேர்தல் முடிவுகளை ரத்துச் செய்யுமாறு உத்தரவிடக்கோரி கொழும்பு மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் நேற்றுமுன்தினம் மனுத் தாக்கல் செய்யப்பட்டது.

இந்தத் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி சார்பில் போட்டியிட்டு உறுப்பினர்களாகத் தெரிவுசெய்யப்பட்ட ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் மூன்று உறுப்பினர்கள் சார்பிலேயே இந்த மனுத்தாக்கல் செய்யப்பட்டது.

எதிர்மனுதாரர்களாகத் தேர்தல் ஆணையாளர், கிழக்கு மாகாண சபை முதல்வர் சிவநேசதுரை சந்திரகாந்தன், அமைச்சர் அமீர் அலி உள்ளிட்ட 18 பேரின் பெயர்கள் குறிப்பிடப்பட்டுள்ளன.

கிழக்கு மாகாண சபைத் தேர்தல் தினம் மற்றும் அதற்கு முந்திய தினங்களில் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியினர் மேற்கொண்ட வன்முறைகள் காரணமாக மட்டக்களப்பில் நீதியானதும், சுதந்திரமானதுமான வாக்கெடுப்பு இடம்பெறவில்லை என மனுதாரர்கள் தங்களது மனுவில் சுட்டிக் காட்டி யுள்ளனர். (சி)

# தோழர் வே.கந்தசாமியின் ஞாபகார்த்த விழா நாளை

யாழ்ப்பாணம்,ஜூன் 7

தோழர் வே.கந்தசாமியின் 61ஆவது ஞாபகார்த்த விழா நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு வட்டுக்கோட்டை ஸ்ரீ கணேச வாசிகசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

தலைவர் சி.இராமச்சந்திரா தலைமையில் நடைபெறும் இவ்விழாவில் ஞாபகார்த்த உரைகளை சமுர்த்தி முகாமையாளர் திருமதி ச.கருணாநிதி, வட்டுக்கோட்டை ஆரம்ப சுகாதார நிலைய அபிவிருத்திக் குழுவின் செயலாளர் க.சிவஞானம், முன்னாள் தபாலதிபர் மு.சண்முகம், பண்ணாகம் மெய்கண்டான் வித்தியாசாலை முன்னாள் அதிபர் கா.நடராஜா ஆகியோர் நிகழ்த்துவார்கள். 'சந்தைப் பொருளாதாரமும் தொழி லாளர் பிரச்சினையும்' என்னும் தலைப்பில் நினைவுப் பேருரையை யாழ்.பல்கலைக்கழகப் பொருளியல்துறைப் பேராசிரியர் வி.பி.சிவநாதன் நிகழ்த்தவுள்ளார். (50)

# விளையாட்டு நிகழ்வுகள்

யாழ்.மாவட்டப் பிரதேச செயலகங்கள் மற்றும் உதவி அரச அதிபர் பிரிவுகளின் விளையாட்டுக் கழகங்களுக்கு இடையேயான ஆண்கள், பெண்களுக்கான கரப்பந்தாட்டச் சுற்றுப்போட்டிகள் இன்று காலை 8 மணிக்கு மல்லாகம் ம.வி.மைதானத்தில் இடம்பெறவுள்ளன.இன்றைய போட்டிகளில் 11 பிர தேச செயலகங்கள் மற்றும் 4 உ.அ. அதிபர் பிரிவுகளின் அணிகள் கலந்து கொள்ளவுள்ளன. போட்டிகள் யாவும் விலகல் முறையில் இடம்பெறவுள்ளன.

* * *

யாழ்ப்பாணம் ஜூன் 07

பலாலி ஆசிரியர் கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டிகள் இன்று சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு நடைபெறும். கோண்டாவில் இராமகிருஷ்ண வித்தியாலய மைதானத்தில் உடலாளர் மன்றத் தலைவர் செல்வன் லோறன்ஸ் பிரதாப் தலைமையில் நடைபெறும். இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி வே. அருணேஸ்வரிவரி வேதநாயகனும் சிறப்பு விருந்தினராக வலிகாமம் கல்வி வலய பிரதிப் பணிப்பாளர் இ.தமிழ்மாறனும் கலந்துகொள்வர்.

# கணனிப் பயிற்சி

யாழ்ப்பாணம்,ஜூன் 7

வடக்கு, கிழக்கு சமுதாய மீள் எழுச்சி அபிவிருத்திக்கான நிகொட் விஸ்தரிப்புத் திட்டத்தின் கீழ் விழிப்புலனற்றோருக்கான 6 மாத கணனிப் பயிற்சி இன்று காலை 9 மணிக்கு யாழ். பிராந்திய ஆணையாளர் அலுவலகத்தில் ஆரம்பித்து வைக்கப்படவுள்ளது.

மாவட்ட சமூகசேவை உத்தியோகத்தர் ஆ.ஞானவேல் தலைமையில் நடைபெறவுள்ள ஆரம்ப நிகழ்வில் பிரதம விருந்தினராக பிராந்திய ஆணையாளர் திருமதி ப. சிவலிங்கம் கலந்து கொள்வார். (202-288)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேசத்தை கட்டியெழுப்புதல், தோட்ட உட்கட்டமைப்பு அபிவிருத்தி அமைச்சு

## வடக்கு– கிழக்கு சமுதாய மீளமைப்பு அபிவிருத்தித் திட்டம் II (நீகோட் II)

## ஆசிய அபிவிருத்தி வங்கியினால் நிதிப்படுத்தப்பட்டது

“ ஆ.அ. வ” கடன் இல. 2168 – SRI(SF)

யாழ் . மாவட்ட நிர்மாண வேலைக்கான

# கேள்வி அறிவித்தல் இல: 08

1. வடக்கு – கிழக்கு சமுதாய மீளமைப்பு அபிவிருத்தித் திட்டத்தின (NECORD-II) ஆகு செலவு சார்பாக பலதரப்பட்ட நாணயங்களில் ஆசிய அபிவிருத்தி வங்கியிலிருந்து (“ஆ.அ.வ”) கடனொன்றை இலங்கை அரசாங்கம் பெற்றுள்ளதுடன். கீழேயுள்ள அட்டவணையில் விவரிக்கப்பட்டுள்ள நிர்மாண வேலைக்கான ஒப்பந்தத்தின்கீழ் தகுதிவாய்ந்த கொடுப்பனவுகளுக்கு இக்கடனின் வரும்படிகளின் பகுதி பிரயோகிக்கப்பட உத்தேசிக்கப்பட்டுள்ளது.
2. இதன் பின்னகத்துத் தொழில் தருநராகக் குறிப்பிடப்படும் NECORD, கருத்திட்டத்தின் பணிப்பாளருக்காக பின்வரும் ஒப்பந்தத்திற்கு தகுதிவாய்ந்த கேள்வி கோருவோரிடமிருந்து பொறிவைக்கப்பட்ட கேள்விகள் தற்போது கோரப்படுகின்றன.

| இல. ஒப்பந்த இனங் காட்டல் இல. | ஒப்பந்தத்தின் பெயர் | வரி சேர்க்கப்படாத ஆகுசெலவும் ஒப்பந்தகாலமும | ஆகக் குறைந்த இக்ராட் பதிவு | கூறுவிலை பிணைப் பணம் (ரூபா) |
|---|---|---|---|---|
| 01. JF/NECORD-II/ED/13 | கொழும்புத்துறை இந்து மகாவித்தியாலய 110'x25' அளவுடைய மூன்று மாடி வகுப்பறைக் கட்டடம் பூ ரணமாக்கல் | ரூபா. 10.18 மில்லியன்<br>7 மாதங்கள் | M5 (கட்டடங்கள்) | 102, 000/= |
| 02. JF/NECORD-II/ED/22 | வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலையில் 70' x25' அளவுடைய மூன்று மாடிக் கட்டடம் பூ ரணப்படுத்தல் | ரூபா. 6.51 மில்லியன்<br>6 மாதங்கள | M6 (கட்டடங்கள) | 66, 000/= |
| 03. JF/NECORD-II/ED/24 | சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரியில் 130'x25' அளவுடைய இருமாடி வகுப்பறைக் கட்டடம் மீளமைத்தல். | ரூபா. 12.63 மில்லியன்<br>8 மாதங்கள் | M5 (கட்டடங்கள்) | 130, 000/= |
| 04. JF/NECORD-II/HS/11 | சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் நீர் வழங்கல் வசதியை ஏற்படுத்துதல் | ரூபா. 7.33 மில்லியன்<br>5 மாதங்கள் | M6 (கட்டடங்கள்) | 74, 000/= |
| 05. JF/NECORD-II/HS/13 | அச்சுவேலியில் ஆயுள்வேத மருந்து, உற்பத்தி நிலையம் நிர்மாணித்தல் | ரூபா. 6.62 மில்லியன்<br>5 மாதங்கள் | M6 (கட்டடங்கள்) | 70, 000/= |
| 06. JF/NECORD-II/HS/16 | சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் நிர்வாகத் தொகுதி மீளமைத்தல் - இரண்டாம் கட்டம் | ரூபா. 24.95 மில்லியன்<br>9 மாதங்கள் | M4 (கட்டடங்கள்) | 250,000/= |
| 07. JF/NECORD-II/IR/01 | யாழ். தீபகற்பத்தில் அமைந்துள்ள 10 உவர் நீர் தடுப்பு அணைகள் மீளமைத்தல் - தொகுதி 1 | ரூபா. 15.09 மில்லியன்<br>7 மாதங்கள | M5 (நீரப்பாசனம்) | 160,000/= |

3. பின்வரும் தகுதிகளைக் கொண்டுள்ளதாக விளங்கும் உறுதியான நோக்கமுடைய சகல ஒப்பந்தகாரர்களுக்கும் கூறுவிலையிடல் திறந்துள்ளது.

I) நிர்மாணப்பயிற்சி, அபிவிருத்தி நிறுவனத்தினால் (ICTAD) விருத்திசெய்யப்பட்ட தேசிய நிர்மாண ஒப்பந்தகாரர் பதிவு, தரப்படுத்தல் திட்டத்தின்கீழ் மேற்படி அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட தரமொன்றில் ஒப்பந்தகாரர் பதிவு செய்யப்பட்டிருத்தல் வேண்டும்.

II) கடந்த ஐந்து வருடங்களினுள் ஆகக்குறைந்தது இரு ஒத்த தன்மையிலான ஒப்பந்தங்களைத் திருப்திகரமாக முடிவுறுத்தியுள்ளதுடன். கடந்த ஐந்து வருடங்களின்போது மேற்கொள்ளப்பட்ட வேலைகளில் திருப்திகரமான சாதனையைக் கொண்டிருத்தல் வேண்டும். இது வாடிக்கையாளர்களிடமிருந்து அத்துடன் / அல்லது உசாவலர்களிடமிருந்து சான்றுப்பத்திரங்களின் மூலம் உறுதிப்படுத்தப்படவேண்டும். இக்காலத்தின்போது மேற்கொள்ளப்பட்ட சகல வேலைகளினதும் முழு நிரலொன்று வழங்கப்படவேண்டும்.

III) “இக்ராட்” வழிகாட்டல் முறைகளின் பிரகாரம் கணக்கிடப்பட்டவாறு வேலையைப் பொறுப்பேற்பவர் போதியளவு ஒப்பந்த ஆற்றலளவைக் கொண்டிருக்கவேண்டும்.

IV) மோசடியான அல்லது வஞ்சனையான நடவடிக்கைகளுக்கு அல்லது திருப்திகரமற்ற வேலை செய்ததனால் தகுதியற்றவர் என்ற பிரகடனத்தின் கீழ் விளங்கக்கூடாது.

V) ஒப்பந்த ஆவணங்கள் வழங்கப்படுவதற்கு முன் ஒப்பந்தகாரரின் புதுப்பிக்கப்பட்ட பதிவுப் புத்தகத்தைச் சமர்ப்பிக்கக் கூடியவராக இருத்தல்வேண்டும்.

4. ஏதாவது ஒப்பந்தகாரருக்கு அனுமதிக்கப்படும் ஆகக்கூடுதலான ஒப்பந்தங்களின் எண்ணிக்கை தற்போது மேற்கொள்ளும் NECORD வேலைகள் அடங்கலாக மூன்றுக்கு மேற்படலாகாது.
5. தகுதிவாய்ந்த கேள்விகோருவோர் மேலதிக விவரங்களை *மாவட்ட பிரதித் திட்டப் பணிப்பாளர் அலுவலகம், நீகோட், கச்சேரி, யாழ்ப்பாணத்தில* பெற்றுக்கொள்ளலாம். தொலைபேசி: **021 – 2223625**, தொலைநகல்: **021 - 2225163**, மின்னஞ்சல்: necordjf@sltnet.lk
6. ஒப்பந்த ஆவணங்கள் ஆனி மாதம் 9ந் திகதி 2008 முதல் ஆனி மரதம் 23ந் திகதி 2008 வரை முற்பகல் 9.00 மணியிலிருந்து பிற்பகல் 3.00 வரை வேலை நாள்களில் மேற்படி அலுவலகத்திலிருந்து மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா 1000/- செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம்.
7. இரு பொறிவைக்கப்பட்ட உறைகளில் புறம்பாகச் சமர்ப்பிக்கப்பட்டுள்ள விலையிடப்பட்ட கேள்விகளையும், கேள்வியிடுவோரின் முன தகுதிக்கு அவசியமான ஆவணத்தையும் கேள்விகள் கொண்டிருக்கவேண்டும் என்பதுடன் இது தொடர்பாக பந்தி 8 இல் குறிப்பிடப்பட்டுள்ள இடம். திகதி மற்றும் நேரம் ஆகியவற்றிற்கு ஏற்ப ஒப்படைக்கப்படவேண்டும்.
8. அந்தந்த வேலைக்குரிய ஒப்பந்தப் பிணைமுறிகளுடன் பொறிவைத்த கேள்விகள் “*தலைவர், மாவட்டக் கேள்விச்சபை, நீகோட, கச்சேரி, யாழ்ப்பாணம்*” இற்கு ஆனி மாதம் 30 ந் திகதி 2008 பி.ப. 2.00 மணிக்கு முன்பாகக் கிடைக்க வேண்டும். உடனடியாக கேள்விகள் திறக்கப்படும். கேள்வி கோருவோர் அல்லது அவர்களது அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதிகள் சமுகமளிக்கலாம்.
9. ஒப்பந்தகாரருக்குக் கேள்வி கோருவதற்கு வேண்டிய விளக்கத்தை அளிப்பதற்கான கூட்டமொன்று கச்சேரியில் ஆனி மாதம் 20 ந் திகதி 2008 பிற்பகல் 2.00 மணிக்கு நடைபெறும்.
10. கேள்விகள் தயாரிப்புக்கு அல்லது ஒப்படைப்புக்கு கேள்விகோருவோருக்கு ஏற்படும் ஆகு செலவுகளுக்கு அல்லது செலவீனங்களுக்குத் தொழில்தருநர் பொறுப்பாகமாட்டார்.

**க.கணேஷ்,**
தலைவர், மாவட்டக் கேள்விச்சபை,
அரசாங்க அதிபர்.
யாழ்ப்பாண மாவட்டம்.

(05/3152)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடை திறப்பு

யாழ்ப்பாணம்,ஜூன் 7

தென்மராட்சியில் சாவகச்சேரி நவீன சந்தையின் உட்புறத்தில் நேற்றுவெள்ளிக் கிழமை 'ஜெகா காலணியகம்' என்னும் வர்த்தக நிலையம் சம்பிரதாய பூர்வமாகத் கோலாகலமாகத் திறந்து வைக்கப்பட்டது. இத் திறப்பு விழா நிகழ்வில் பிர முகர்கள், வாடிக்கையாளர்கள் உட்படப் பலர் கலந்துகொண்டனர். (202)

## மெய்வன்மைப் போட்டி பிற்போடப்பட்டது

யாழ்ப்பாணம் ஜூன் 07

தென்மராட்சி சாரணர் சங்கக் கிளையினால் நாளை ஞாயிற்றுக்கிழமை சாவகச்சேரி இந்துக் கல்லூரி மைதானத்தில் நடாத்தவிருந்த சாரணர்களுக்கான மெய்வன்மைப்போட்டிகள் தவிர்க்கமுடியாத காரணங்களினால் பின்போடப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. போட்டிகள் அடுத்த மாதம் நடாத்தப்படும் என சாரணர் மாவட்ட ஆணையாளர் செ.சுப்பிரமணியம் அறிவித்துள்ளார். (1-207)

## நாய்க்குட்டி விற்பனைக்கு

40 நாள் நிரம்பிய அல்ஷேசன் நாய்க்குட்டி (பூச்சி நீக்கப்பட்டது) விற்பனைக்குண்டு.

*தொடர்பு:* தயாநிதி, பிடாரி அம்மன் கோவிலடி அருகில், ஆனைக்கோட்டை.

## தவறி விட்டது

முருகேசு. திருகரன் என்னும் பெயரில் உள்ள மோட்டார் சைக்கிள் காப்புறுதிப்பத்திரம், வரிப்பத்திரம் மற்றும் இராணுவப்பதிவு (கனரட்ணம் பாலசுப்பிரமணியம் என்னும் பெயரிலேயே ஆமிப்பதிவு உள்ளது.) ஆகியன 04.06.2008 அன்று திருநெல்வேலி மற்றும் கோப்பாய்ப் பகுதிகளில் தவறவிடப்பட்டன. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து இம்முகவரியில் ஒப்படைத்து உதவவும் :- 695, நாவலர் வீதி, நல்லூர், தொ.பே - 0774118961.

## தவறிவிட்டது

எனது வாகனத்தின் பற்றரி (VAN BATTERY) 04.06.2008 இல் மானிப்பாயிலிருந்து சங்கானை நோக்கி வரும்போது, வாகனத்திலிலுந்து வீழ்ந்து தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் பின்வரும் முகவரியுடன் தொடர்பு கொள்ளவும் தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

**இ.ரஞ்சன்,**
**ரஞ்சன் ஸ்ரோர்ஸ்,**
பிரதான வீதி, சங்கானை.
T.P.No.0602219087

*தகவல்:* இ.ரஞ்சன்.

## PATRICIAN INSTITUTES VACANCY

**RADIO AND T.V. REPAIRING INSTRUCTOR**
**றேடியோ T.V. போதனாசிரியர்**

மேற்படி பதவிக்குத் தகுதியானவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. தகுதியானவர்கள் உடன் நேரில் அலுவலகத்துடன் தொடர்புகொள்ளவும்.

மேலதிக விவரங்களுக்கு:

**பதிவாளர்,**
*61 (59), St.Patrick's Rd., Jaffna. T.P.NO.:222 6148.*

## பெண் பராமரிப்பாளர் தேவை

இலங்கை நாற்சதுர சுவிசேஷ சபையினரால் இல.35, செல்லர் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம் என்னும் விலாசத்தில் நடாத்தப்படும் எமது நாற்சதுர பெண்கள்-சிறுவர் இல்லத்திற்கு சேவைமனப்பான்மையுள்ள, 35-45 வயதிற்கு இடைப்பட்ட மேலதிக பெண்பராமரிப்பாளர் தேவைப்படுவதனால், இப்பணிக்குத் தகுதியானவர்கள் இம்மாதம் 20ஆம் திகதி காலை 9 மணி தொடக்கம் 12 மணிவரையுள்ள நேரப்பகுதியில் தகுதியான ஆவணங்களுடன் எமது காரியாலயத்திற்கு நேரில் சமுகமளிக்கும்படி வேண்டுகிறோம்.

**விபரங்களுக்கு:**
இலங்கை நாற்சதுர சுவிசேஷ சபை,
இல. 673 (241), பருத்தித்துறை வீதி,
நல்லூர் - முத்திரைச்சந்தி, யாழ்ப்பாணம்.
தொ.எண்:021 222 6730 (75176)

## மரண அறிவித்தல்

### *வேலுப்பிள்ளை பாலசுப்பிரமணியம்*

***(இளைப்பாறிய கணக்காளர், காரைநகர்)***

காரைநகர், மாப்பாணபுரியை வதிவிடமாகக்கொண்ட வேலுப்பிள்ளை பாலசுப்பிரமணியம் 04.06.2008 புதன்கிழமை இந்தியாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வேலுப்பிள்ளை - தங்கப்பிள்ளை தம்பதியினரின் அன்பு மகனும் காலஞ்சென்ற நேசரத்தினத்தின் அன்புக் கணவரும் பாலநேசன், அன்பழகி (கனடா), உமாசுசி, ரோகினி (கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையும் காலஞ்சென்ற இந்திரகுமார் மற்றும் கணேசலிங்கம் (கனடா) ஆகியோரின் அன்பு மாமனாரும் சுசிந்திரன் (டோகா), ஜனனி, ஆகாஷ் ஆகியோரின் பேரனுமாவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (06.06.2008) வெள்ளிக்கிழமை மு.ப. 10 மணிக்கு இந்தியாவில் நடைபெற்றன. இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

*மாப்பாணபுரி,*
*காரைநகர்.*

தகவல்:
ச.குணநாயகம்
(மைத்துனர்).

### நியூஸிலாந்துடனான மூன்றாவது டெஸ்ட்:

# பீற்றர்ஸனின் சதத்தின் உதவியுடன் நிமிர்ந்தெழுந்தது இங்கிலாந்து அணி



டிரன்ட்பிரிட்ஜ், ஜூன் 07

நியூஸிலாந்து அணிக்கு எதிராக நேற்றுமுன்தினம் ஆரம்பமான மூன்றாவது டெஸ்ட் போட்டியில் அடுத்தடுத்து விக்கெட்டுகளை இழந்து கொண்டிருந்த இங்கிலாந்து அணியை பீற்றர்ஸன் சதம் கடந்து கைகொடுத்து சரிவிலிருந்து மீட்டெடுத்தார்.

இங்கிலாந்து சென்றுள்ள நியூஸிலாந்து அணி மூன்று போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடுகிறது. முதல் டெஸ்ட் வெற்றிதோல்வியின்றி முடிந்தது. இரண்டாவது டெஸ்ட் போட்டியில் வென்ற இங்கிலாந்து தொடரில் 1-0 என்ற முன்னிலையில் இருக்கிறது. இந்நிலையில் மூன்றாவது மற்றும் கடைசி டெஸ்ட் போட்டி நேற்றுமுன்தினம் டிரன்ட்பிரிட்ஜ் நகரில் தொடங்கியது. நாணயச் சுழற்சியில் வென்ற நியூஸிலாந்து அணித்தலைவர் வெட்ரோறி, முதலில் களத்தடுப்பைத் தேர்வு செய்தார்.

இங்கிலாந்து அணியின் ஆரம்ப வீரர்களாகக் களமிறங்கிய அன்ட்ரூ ஸ்ரோஸ், அலஸ்ரியர் குக் ஆகியோர் ஏமாற்றகரமான தொடக்கத்தைப் பெற்றுக்கொடுத்தனர். மோசமாக விளையாடிய அலஸ்ரியர் குக் 6 ஓட்டங்களுடன் கைல் மில்ஸின் வேகத்தில் 'கிளீன் போல்ட்' ஆனார். அடுத்து வந்த அணித்தலைவர் மைக்கல் வோகன் பொறுப்பில்லாமல் துடுப்பெடுத்தாடினார். இவர் 16 ஓட்டங்களுடன் திருப்தியடைந்து பவிலியன் திரும்பினார். இவர்களைத் தொடர்ந்து ஓரளவு ஓட்டங்களைச் சேர்த்த ஸ்ரோஸும் ஆட்டமிழந்தார். மந்தமாக விளையாடிய இவர் 5 பவுண்டரிகள் உட்பட 97 பந்துகளில் 37 ஓட்டங்களை எடுத்தார்.

அடுத்து வந்த இயன் பெல், போல் கொலிங்வூட் ஆகியோர் அடுத்தடுத்த ஓவர்களில் ஓட்டமெதுவும் பெறாமல் விக்கெட்டைப் பறிகொடுக்க இங்கிலாந்து அணி திணறத் தொடங்கியது.

இந்நிலையில் களமிறங்கிய அம்புரோஸ், பீற்றர்ஸனுடன் ஜோடி சேர்ந்தார். இந்த ஜோடி அபார ஆட்டத்தை வெளிப்படுத்தி திடீர் சரிவைச் சரிசெய்தனர். இவர்களைப் பிரிக்க வெட்ரோறி எடுத்த முயற்சிகளுக்கு உடனடிப் பலன் கிட்டவில்லை.

அபார ஆட்டத்தை வெளிப்படுத்திய பீற்றர்ஸன், டெஸ்ட் அரங்கில் தனது 12ஆவது சதத்தைப் பூர்த்திசெய்து அசத்தினார். மறுமுனையில் அம்புரோஸும் சிறப்பாக ஆடி அரைச்சதம் நிறைவுசெய்தார். இவர்களிருவரும் 6ஆவது விக்கெட்டுக்காக தம்மிடையே 161 ஓட்டங்களைச் சேர்த்தனர். இந்நிலையில் சிறப்பாக ஆடிக்கொண்டிருந்த பீற்றர்ஸன் 115 ஓட்டங்களுடன், ஒபிரைனின் வேகத்தில் விக்கெட்டைப் பறிகொடுத்தார். 223 பந்துகளுக்கு முகம் கொடுத்திருந்த அவர், தனது ஓட்டஎண்ணிக்கையில் 14 பவுண்டரிகளையும் சேர்த்திருந்தார்.

தொடர்ந்து மிரட்டிய ஒபிரைன், 67 ஓட்டங்களுடன் அம்பு ரோஸையும் ஆட்டமிழக்கச் செய்தார். நேற்றுமுன்தினம் நிறைவுபெற்ற முதல்நாள் ஆட்டநேர முடிவில் இங்கிலாந்து அணி 7 விக்கெட்டுகள் இழப்புக்கு 273 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. ஸ்ருவேட் போர்ட் 15 ஓட்டங்களுடனும், ஜேம்ஸ் அன்டர்ஸன் ஓர் ஓட்டத்துடனும் ஆட்டமிழக்காமலுள்ளனர்.

நியூஸிலாந்து அணியின் பந்துவீச்சில் ஒபிரைன் 4 விக்கெட்டுகளையும், கைல் மில்ஸ் 3 விக்கெட்டுகளையும் வீழ்த்தியுள்ளனர்.

நேற்று இரண்டாம் நாள் ஆட்டம் நடைபெறவிருந்தது.

## முகமது ஆஸிப்புக்கு வாழ்நாள் தடை?

டுபாய், ஜூன் 07

சர்ச்சைக்குரிய முகமது ஆஸிப், போதைப் பொருளான ஒரு வகை கஞ்சாவை வைத்திருந்தமை நிரூபணமாகியுள்ளது. இவர் மீது டுபாயில் நீதிமன்றத்தில் வழக்குத் தொடுக்கப்படாதமையால், விரைவில் அங்கிருந்து வெளியேற்றப்படுவார் எனத் தெரிகிறது. ஒருவேளை வழக்குத் தொடுக்கப்பட்டால், 4 ஆண்டுகள் சிறைத் தண்டனை மற்றும் போட்டிகளில் பங்கேற்க வாழ்நாள் தடை விதிக்கப்படலாம் எனத் தெரியவருகின்றது.

இந்நிலையில் ஆஸிப் நேற்றுமுன்தினம் டுபாய் அரச சட்டத்தரணி முன் ஆஜர் செய்யப்பட்டார். அரச சட்டத்தரணி விசாரணையை எதிர்வரும் 8ஆம் திகதி வரை தள்ளிவைத்துள்ளார். இதனால் ஆஸிப்பின் தடுப்புக் காவல் நீடிக்கிறது. இதனால், இவர் பாகிஸ்தானுக்கு அனுப்பப்படுவாரா அல்லது டுபாயில் இவர் மீது வழக்குத் தொடரப்படுமா என்ற குழப்பமான நிலை தொடர்கிறது.

## சவாலான முத்தரப்புத் தொடர்!

### பாக். பயிற்சியாளர் பேட்டி

கராச்சி, ஜூன் 07

நாளை ஆரம்பமாகவுள்ள முத்தரப்புத் தொடரில் இந்திய அணி, பாகிஸ்தானுக்கு கடும் சவால் கொடுக்கும் என்றும் ஆசியக் கிண்ணத்தில் வெற்றிபெற இத்தொடர் சிறந்த பயிற்சியாக இருக்கும் எனவும் பாகிஸ்தான் அணியின் பயிற்சியாளர் ஜெவ் லோஸன் தெரிவித்துள்ளார்.

ஆசியக் கிண்ணப் போட்டிகள் கராச்சி மற்றும் லாகூரில் எதிர்வரும் 24ஆம் திகதி தொடங்குகிறது. அதற்கு முன்பாக நாளை 8ஆம் திகதி பங்களாதேஷில் நடக்கும் முத்தரப்புத் தொடரில் இந்தியா, பாகிஸ்தான், பங்களாதேஷ் அணிகள் மோதுகின்றன.

இந்தத்தொடர் பற்றி பாகிஸ்தான் அணியின் பயிற்சியாளர் லோஸன் கூறியவை வருமாறு:-

''பங்களாதேஷில் நடைபெறவுள்ள முத்தரப்புத் தொடரில் இந்திய அணி, பாகிஸ்தானுக்கு கடும் சவாலாக இருக்கும். ஆசியக் கிண்ணத்தைக் கைப்பற்றுவதே எங்கள் அணியின் முழுநோக்கம். இதற்கு பங்களாதேஷ் முத்தரப்புத் தொடர் சிறந்த பயிற்சியாக இருக்கும். இந்தத் தொடரில் இந்திய அணியின் பலம், பலவீனம் ஆகியவற்றைத் தெரிந்துகொண்டு அதற்கேற்ப புதுவியூகங்களை வகுத்து வெற்றிபெறுவோம்.

தற்போது நடந்துமுடிந்த ஐ.பி.எல். தொடரில் பாகிஸ்தான் வீரர்கள் சிறப்பாக விளையாடியது எங்கள் அணிக்கு கூடுதல் பலம் சேர்க்கிறது. ஒருநாள் மற்றும் ருவெண்ரி/20 போட்டிகள் முற்றிலும் மாறுபட்டது. இதனை எங்கள் அணி வீரர்கள் தெளிவாக புரிந்து கொண்டு சிறப்பாகச் செயற்படுவார்கள்.'' - இவ்வாறு லோஸன் கூறினார்.




## தண்டவாளம் குண்டுவைத்துத் தகர்ப்பு; பாகிஸ்தானில் இரண்டு சிறுவர்கள் பலி!

குவெட்டா, ஜூன் 07

பாகிஸ்தானில் பலுசிஸ்தான் மாநிலத்தில் குவெட்டா நகர் அருகே தீவிரவாதிகள் ரயில் பாதையைக் குண்டு வைத்துத் தகர்த்தனர். இந்தத் தாக்குதலில் 2 சிறுவர்கள் பலியானார்கள்.

இந்தத் தாக்குதக்குதலுக்கு யார் காரணம் என்பதைத் தெரிவிக்க பொலிஸார் மறுத்து விட்டனர். ஆனால் தேசியவாத கிளர்ச்சிக்காரார்கள்தான் இந்த தாக்குதலை நடத்தியிருக்கிறார்கள் என்று கூறப்படுகின்றது. இந்த கிளர்ச்சிக்காரர்கள், பலுசிஸ்தானில் பல ஆண்டுகளாக மாநில சுயாட்சி கோரிப் போராடி வருகிறார்கள். அவர்கள் சிறிய அளவில் வன்முறைப் போராட்டங்களில் ஈடுபட்டு வருகிறார்கள்.

இவர்கள் ரயில்பாதைக்கு அருகில் ஒரு குண்டை வைத்தனர். அது வெடித்ததில் 4 அடி நீளத்துக்கு தண்டவாளம் தூக்கி எறியப்பட்டது. ரயில் பாதைக்கு அருகே விளையாடிக் கொண்டிருந்த சிறுவர்களில் 2 பேர் பலியானார்கள். இந்தச் சம்பவம் காரணமாக ரயில் போக்குவரத்து பாதிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

# ஜனாதிபதித் தேர்தலில் ஒபாமா வெற்றிபெற ஆதரவு அளிப்பேன்

### ஹிலாரி அறிவிப்பு

நியூயோர்க், ஜூன் 07

''அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் ஜனநாயகக் கட்சி சார்பில் போட்டியிடும் பராக் ஒபாமா வெற்றி பெறுவதற்கு ஆதரவு அளிப்பேன்'' என்று வேட்பாளர் தெரிவில் அவரை எதிர்த்துப் போட்டியிட்டுத் தோல்வியடைந்த ஹிலாரி கிளின்ரன் அறிவித்திருக்கிறார்.

அமெரிக்க ஜனாதிபதித் தேர்தல் எதிர்வரும் நவம்பர் மாதம் 4 ஆம் திகதி நடக்கவிருக்கிறது. தேர்தலில் குடியரசுக்கட்சி சார்பில் ஜோன் மெக்கெய்ன் போட்டியிடுகிறார். ஜனநாயகக் கட்சி சார்பில் வேட்பாளராக யாரை நியமனம் செய்வது என்பதற்காக நடந்த தேர்தலில் கடந்த 5 மாதங்களாகக் கடும் போட்டி நிலவியது. இதில் நியமனத்துக்குத் தேவையான வாக்குகளைப் பெற்று முன்னணியில் இருந்த ஒபாமா தேர்வு பெற்றார். தோல்வியை ஏற்றுக்கொண்டு ஹிலாரி போட்டியில் இருந்து விலக முடிவு செய்திருக்கின்றார்.

இந்நிலையில் ஹிலாரி தன் ஆதரவாளர்களுக்கு ஒரு கடிதம் எழுதியிருக்கிறார். அதில் அவர் கூறியிருப்பவை வருமாறு:-

என் ஆதரவாளர்களுக்கு நன்றி தெரிவிக்கவும், ஒபாமாவுக்கு என் ஆதரவைத் தெரிவிக்கவும், கட்சி ஒற்றுமையை வலியுறுத்தியும் நான் எதிர்வரும் சனிக்கிழமை (இன்று) வாஷிங்டனில் ஒரு விருந்துக்கு ஏற்பாடு செய்துள்ளேன். அந்த நிகழ்ச்சியில் நான் வெளிப்படையாக ஒபாமாவுக்கான ஆதரவைத் தெரிவிப்பேன். ஜனநாயகக் கட்சி வேட்பாளர் நியமனத்தை ஒபாமா பெற்றால் நான் மனப்பூர்வமான ஆதரவை அவருக்கு அளிப்பேன் என்ற உறுதி மொழியை என் பிரசாரம் முழுவதும் நான் கூறி வந்திருக்கிறேன். அந்த உறுதி மொழியை செயற்படுத்தும் நேரம் வந்துவிட்டது.



எனக்கும் ஒபாமாவுக்கும் இடையே உள்ள வேறுபாடு சிறியதுதான். மெக்கெய்னுடன் எனக்கு உள்ள வேறுபாட்டை ஒப்பிட்டால் இந்த வேறுபாடு சாதாரணமானதுதான். கட்சியை எப்படி ஒபாமா பின்னால் ஒருங்கிணைப்பது என்பது பற்றி சனிக்கிழமை நடக்கும் நிகழ்ச்சியில் அறிவிப்பேன்.- இவ்வாறு அந்தக் கடிதத்தில் ஹிலாரி குறிப்பிட்டிருக்கிறார்.

# ஆண்களுடைய வியர்வையே பெண்களைக் கவர்கிறதாம்!

### வாசனைத் திரவியங்கள் வீண் என்கிறது ஆய்வு

சிட்னி, ஜூன் 07

பெண்களைக் கவர வாசனைத் திரவம் எதையும் உடம்பில் அடித்துக் கொள்ளத் தேவை இல்லையாம். ஆண்களின் அக்குளில் உருவாகும் வியர்வையே போதும் என்று ஆராய்ச்சியில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

பெண்களைக் கவர்வதற்காக பந்தாவாக உடை அணிவது, 'பொடி ஸ்பிரே', 'சென்ட்' அடித்துக் கொண்டு வாசனையைப் பரப்பி விடுவது போன்றவற்றில் ஆண்கள் அதிக ஆர்வம் காட்டுகின்றனர். இதெல்லாம் வீண் செலவுதானாம். பெண்களைக் கவர்வதற்காக இந்தளவுக்கு அலட்டிக் கொள்ள தேவையில்லை என்று பென்சில்வேனியாவில் உள்ள மோனல் இரசாயன உணர்வு மையத்தைச் சேர்ந்த விஞ்ஞானிகள் கூறுகின்றனர். ஆண்களின் அக்குளில் உருவாகும் வியர்வையே பெண்களைத் தானாக இழுத்து வந்து விடும் என்று இவர்கள் கண்டுபிடித்துள்ளனர்.

அக்குளில் உருவாகும் வியர்வையில் ''பிரோமோன்'' என்ற இராசயனத் திரவம் வெளிப்படுகின்றது. வாசனையற்ற இந்தத் திரவம்தான், 'இவர் நமக்காக பிறந்துள்ளவர்'' என்ற எண்ணத்தை பெண்களின் மூளையில் தூண்டி விடுகின்றதாம். மேலும், பெண்களுக்கு ''லுடெய்னிசெங்'' என்ற ஹோமோன் சுரப்பையும் இது அதிகரிக்கிறது. இந்த ஹோமோன் பெண்களின் மாதவிடாயைக் கட்டுப்படுத்துகிறது. இந்தக் கண்டு பிடிப்பின் மூலம், எதிர்காலத்தில் மலட்டுத்தன்மையை நீக்குவதற்கான புதிய மருந்தைக் கண்டு பிடிக்கும் வாய்ப்பும் உள்ளதாக மோனல் மைய விஞ்ஞானிகள் கூறியுள்ளனர்.

# உலகளவில் உணவு உற்பத்தியை இரட்டிப்பாக்குவதற்கு ஐ.நா. திட்டம்

ரோம், ஜூன் 07

2030 ஆம் ஆண்டளவில் உலக உணவுப் பொருள் உற்பத்தியை இரட்டிப்பாக்குவதற்கும், வறிய நாடுகளிலுள்ள விவசாயிகளுக்குப் பெரிதும் உதவுவதற்கும் ஐ.நா. திட்டமிட்டுள்ளது. உணவுப் பொருள் தட்டுப்பாட்டை நீக்குவதற்கும், விலைவாசிகள் ஏற்றத்தைத் தடுப்பதற்கும் முன்வரும் உதவியாளர்களை ஊக்குவிப்பதற்கும் ஐ.நா. அந்த முடிவை எடுத்துள்ளது.

தற்போதைய உணவு நெருக்கடிகள் தொடர்பாக, ரோமில் நடைபெற்ற மூன்று நாள் உச்சி மாநாட்டின் முடிவில், இவற்றிற்கான முடிவுகள்எடுக்கப்பட்டன. இதில் 181 நாடுகளைச் சேர்ந்த தலைவர்கள் கலந்து கொண்டார்கள். இங்கு விவசாயத்துறைக்கு முதலிடம் கொடுக்கப்பட்டது.

ஐ.நா.செயலாளர் நாயகம் பான்-கீ-மூன் பேசுகையில் ''தற்போதைய உணவு நெருக்கடிகளைத் தவிர்ப்பதற்கு, ஓர் ஆண்டிற்கு 2 ஆயிரம் கோடி ஸ்ரேலிங் பவுண்கள் தேவை'' என்றார்.

உலகெங்கணும் 86 கோடியே 20 இலட்சம் மக்கள், சத்துணவின்றி ஊட்டம் குறைந்தவர்களாக உள்ளார்கள். தற்போதைய வளங்களால் இதனை ஈடு செய்துவிட முடியாது என மாநாட்டில் பங்குபற்றியவர்கள் சுட்டிக் காட்டினார்கள்.

இந்த உச்சி மாநாட்டின் திட்டப்படி, 2030 ஆண்டளவில் உணவுப் பொருள் உற்பத்தியை இரட்டிப்பாக்கும் பொருட்டு, அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளிலுள்ள சிறு விவசாயிகள் நிதியுதவி அளிக்கப்பட்டு ஊக்குவிக்கப்படுவார்கள். 60 நாடுகளிலுள்ள 7 கோடியே 50 இலட்சம் மக்களுக்கு, மேலதிகமாக, 100 கோடியே 20 லட்சம் டொலர் பெறுமதியான உணவு உதவியாக வழங்கப்படும்-என்றார்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசின் ஆழ ஊடுருவும் அணியின் இலக்கு புலிகளே; அப்பாவிப் பொதுமக்கள் அல்லர்

## இராணுவப் பேச்சாளர் பி.பி.ஸியில் தெரிவிப்பு

கொழும்பு, ஜூன் 07

''இராணுவத்தினரின் ஆழ ஊடுருவும் அணியினர் விடுதலைப் புலிகளை மாத்திரம் இலக்கு வைத்தே தாக்குதல்கள் நடத்துகின்றனர். அவர்கள் பொதுமக்கள் மீது தாக்குதல் மேற்கொள்வதில்லை.''

- இவ்வாறு அரசின் இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் உதய நாணயக்கார கூறியிருக்கின்றார்.

''இதனை நாங்கள் கடந்த காலங்களில் நிரூபித்திருக்கின்றோம். ஆனால், விடுதலைப் புலிகளோ அப்பாவிப் பொதுமக்கள் மீது இலக்கு வைத்துத் தாக்குதல் நடத்துகின்றனர்.'' - என்றும் அவர் தெரிவித்தார்.

பி.பி.சி. தமிழோசை செய்திச் சேவைக்கு நேற்று இரவு வழங்கிய செவ்வியிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் கூறியிருந்தவை வருமாறு:-

கொழும்பு மற்றும் கண்டி ஆகிய பிரதேசங்களில் இன்று (அதாவது நேற்று) இடம்பெற்ற இருவேறு பஸ் குண்டுத் தாக்குதல்களுக்கு விடுதலைப் புலிகளே காரணம். நிச்சயமாக இது அவர்களின் வேலைதான்.

''ஏனெனில் விடுத்தலைப் புலிகளால் வன்னிப்பகுதியில் உள்ள முன்னரங்க நிலைகள் மீது இடம்பெறும் தாக்குல்களுக்குத் தாக்குப்பிடிக்க முடியவில்லை. எனவே, புலிகள் அப்பாவி சிவிலியன்களை இலக்குவைத்துத் தாக்குகின்றார்கள். இதன் மூலம் இராணுவத்தினரின் கவனத்தை வடக்கிலிருந்து தெற்கு நோக்கி திருப்புவதற்கு விடுதலைப் புலிகள் முயல்கின்றனர். - என்றார்.

(சி)

# குண்டுத் தாக்குதலையடுத்து மொறட்டுவவில் பல்கலை. தமிழ் மாணவர்கள் மீது தாக்குதல்!

கொழும்பு, ஜூன் 7

மொறட்டுவ கட்டுப்பெத்தவில் நேற்றுக் காலை பஸ் மீது நடத்தப்பட்ட கிளைமோர்த் தாக்குதலையடுத்து மொறட்டுவ பல்கலைக்கழகத்திற்குள் தமிழ் மாணவர்களுக்கு எதிரான வன்முறைகள் கட்டவிழ்த்துவிடப்பட்டுள்ளன எனத் தகவல்கள் தெரிவித்தன.

இச்சம்பவம் இடம்பெற்ற நேரத்தில் பல்கலைக்கழகத்திற்குள் இருந்த தமிழ் மாணவர்களை சிங்கள மாணவர்கள் கடுமையாகத் தாக்கினர் எனவும் 10இற்கும் அதிகமான தமிழ் மாணவர்கள் சிங்கள மாணவர்களால் நையப்புடைக்கப்பட்டனர் எனவும் தெரிவிக்கப்பட்டது.

இதேநேரம், சிங்கள மாணவர்களால் தாக்குதலுக்கு இலக்கான தமிழ் மாணவர்கள் பொலிஸாரால்அழைத்துச் செல்லப்பட்டு மொறட்டுவ பொலிஸ் நிலையத்தில் வைக்கப்பட்டிருந்தனர். இவர்களை வாழ்க்கைத் தொழில் மற்றும் தொழிற்பயிற்சி அமைச்சர் இராதாகிருஷ்ணன் நேரில் சென்று சந்தித்துப் பேசினர் என்று அவரது ஊடகப் பிரிவு தெரிவித்தது. இவர்களில்8தமிழ்மாணவிகளும்18மாணவர்களும் அடங்கினர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இவர்கள் தவிர மேலும் 30 தமிழர்கள் மொறட்டுவ பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர் எனவும் தெரிவிக்கப்பட்டிருக்கின்றது.

அதேநேரம் மொறட்டுவவில் தமிழர்களுக்குச் சொந்தமான கடைகள் மற்றும் வீடுகள் சில சிங்களக் காடையர்களின் தாக்குதல்களுக்கு இலக்காகியுள்ளன. அது மட்டுமன்றி வெள்ளவத்தை மற்றும் தெஹிவளையில் வீதியால் செல்லும் இளைஞர்கள் மீது சிங்களக் காடையர்கள் சிலர் தாக்குதல் நடத்தினர்எனவும்தகவல்கள்தெரிவித்தன.

# பொதுமக்கள் மீதான படுகொலைகளை வன்மையாகக் கண்டிக்கிறது ஈ.பி.டி.பி.

கொழும்பு, ஜூன் 7

''கட்டுப்பெத்த பகுதியிலும் கண்டி பொல்கொல்ல பகுதியிலும் பயணிகள் பஸ்கள் மீது நேற்று புலிகளால் நடத்தப்பட்ட கிளைமோர்த் தாக்குதலை நாம் கடுமையாகக் கண்டிக்கின்றோம். அப்பாவிப் பொதுமக்கள் மீதான இத்தகைய படுகொலைகளினால் தமிழ் மக்களுக்கு எத்தகைய விடுதலையையும் பெற்றுத்தர முடியாது. மாறாக தமிழ்-சிங்கள மக்களிடையே இனப்பகையையே ஏற்படுத்தும்.''

- இவ்வாறு ஈ.பி.டி.பி. கண்டனம் தெரிவித்திருக்கிறது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு:-

அப்பாவி மக்கள் 21 பேர் படுகொலையாகவும் 40இற்கு அதிகமானவர்கள் காயமடையவும் காரணமாக இருந்த இந்தத் தாக்குதலையும், கடந்த நான்காம் திகதி தெஹிவளையில் ரயில் மீதான தாக்குதலையும் தமிழ் மக்கள் மட்டுமல்ல இந்த நாட்டின்அனைத்துமக்களும்வெறுக்கின்றனர்.

இச்சம்பவங்கள் எதுவும் படையினரையோ அல்லது யுத்தத்தில் தொடர்புபட்ட எவரையும் இலக்கு வைத்து நடத்தப்படவில்லை. அப்பட்டமாக அப்பாவி பொதுமக்களை இலக்கு வைத்து நடத்தப்பட்டவையாகும்.

புலிகள் தம்மீதான நெருக்கடிகளை, இழப்புகளை திசை திருப்புவதற்காகவே இயலாமையின் வெளிப்பாடாக இத்தகைய தாக்குதல்களைத் தொடுக்கின்றனர். இதையிட்டு தமிழர்களும் சரி வேறு எவரும் மகிழ்ச்சிகொள்ள மாட்டார்கள். மாறாகப் புலிப்பயங்கரவாதத்தின் கோரமான முகத்தையே மேற்படி சம்பவங்கள் வெளிக்காட்டியிருக்கின்றன.

அப்பாவிப் பொதுமக்கள் மீது புலிகள் நடத்தும் இத்தகைய படுகொலைகளை அனைவரும் கடுமையாகக் கண்டிக்க வேண்டும். பயங்கரவாதத்துடன் வாழ முடியாது. பயங்கரவாதம் முடிவுக்குக் கொண்டு வரப்பட அனைத்து மக்களும் முன்வர வேண்டும். கொலைகளுக்கூடாக எத்தகைய பிரச்சினைகளுக்கும் தீர்வுகாண முடியாது-என்றுள்ளது. (க)

## இனக்கலவர...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ருப்பதை இது புலப்படுத்துகிறது.

கடந்த சில வாரங்களில் விழிப்புணர்வு மிக்க பொதுமக்களால் வாகனங்களிலும் பொது இடங்களிலும் குண்டுகள் கண்டுபிடிக்கப்பட்டன.

மறைத்து வைக்கப்பட்டுள்ள குண்டுகளைக் கண்டுபிடிப்பது, விடுதலைப் புலிகளுடன் தொடர்புடைய நபர்களைக் கைது செய்வது ஆகியவற்றில் பொதுமக்களின் பங்களிப்புப் பாராட்டப்படத்தக்கது.

விடுதலைப் புலிகள் தொடர்ச்சியாகப் பொதுமக்களைஇலக்குவைப்பதை சகல நாகரிக சமூகங்களும் கண்டிக்க வேண்டும்.

- இப்படி ஜனாதிபதி தெரிவித்தார்.

(அ-சி)

## கல்கிஸைப்.... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கிளைமோர் குண்டுகளைப் பொலிஸார் நேற்றுக்காலை மீட்டனர் என்று தெரிவிக் கப்படுகிறது.

பொதுமகன் ஒருவர் வழங்கிய தகவலை அடுத்தே இந்தக் குண்டுகள் மீட்கப் பட்டன என்று பொலிஸார் தெரிவித்தனர்.

அப்பகுதிக்கு விரைந்த குண்டு செயலிழக்கும் பிரிவினர் குண்டுகளை செயலிழக்கச் செய்தனர் என்றும் தெரிவிக் கப்பட்டது. (சி)

## கரையோரப்.... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தகவல்கள் தெரிவித்தன.

இதற்கு முன்னர் கிபிர் விமானங்கள் நகரப்பகுதி மற்றும் கரையோரப் பகுதி ஊடாக பேரிரைச்சலுடன் வட்டமிட்டுச் சென்றன. அதன்பின் அப் பகுதியில் பரா வெளிச்சக் குண்டுகளும் ஏவிவிடப் பட்டதை காணமுடிந்தது. குருநகர் பகுதிக்கு அப்பால் வெகு தொலைவில் ஷெல்கள் வீழ்ந்து வெடித்ததால் மக்கள் இடம்பெயர்ந்தாக கூறப்பட்டபோதிலும் ஊர்ஜிதமானதகவல்எதுவும்கிடைக்கவில்லை

## சரஸ்வதி வித்தியாலய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பிரதம விருந்தினராக யாழ்.பல்கலைக் கழக உயர்பட்டப் படிப்புகள் பீடாதிபதி பேராசிரியர் க. கந்தசாமியும் சிறப்பு விருந்தினராக தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் கு.பிரேம காந்தனும் கௌரவ விருந்தினராக தென் மராட்சி வலய பிரதித் திட்டமிடல் கல் விப் பணிப்பாளர்நா.சத்தியநாதனும்கலந்து கொள்வர். (1-207)

## யாழ்.மாவட்ட...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி

அவருக்கு கிடைத்துள்ளது.

பருத்தித்துறை மேலதிக நீதிபதியாகப் பணியாற்றிய அலெக்ஸ்ராஜா பருத்தித்துறை மாவட்ட நீதிபதியாக நியமிக்கப்பட்டுள்ளார். அவருக்குரிய கடிதமும் நீதிச் சேவை ஆணைக்குழுவிடம்இருந்து கிடைத்துள்ளது.

இருவரும் நாளைமறுதினம் தமது பதவிகளை பொறுப்பேற்பர் என்று தெரிவிக்கப்பட்டது. (அ-1-218)

## தமிழர்கள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

என்பதால் பாதுகாப்பு அதிகரிக்கப் பட்டிருந்ததாகவும்-

நேற்றிரவு வரை வன்செயல் எதுவும் குறித்து முறைப்பாடுகிடைக்கவில்லை என்றும் - பொலிஸார் தெரிவித்தனர்.

இதேவேளை-

நேற்று மாலைக்குப் பின்னர் வாகனப் போக்குவரத்துக் குறைந்து காணப்பட்டதாகவும் சன நடமாட்டம் இன்றி வீதிகள் வெறிச்சோடிக் காணப் பட்டதாகவும் தெரி விக் கப்பட்டது. (அ-1)

## கண்டியிலும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கத்துக்கிடமான ஒருவரைப் பொதுமக்கள் துரத்திப் பிடித்து பொலிஸாரிடம் ஒப்படைத்தனர் என்றும் கூறப்படுகிறது. (சி)

## ஊரடங்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ணுவத்தினரும் பொலிஸாரும் அனுப்பப்பட்டனர். தமிழர்களின் வீடுகள், கடைகள் கடும் சோதனைக்கு உட்படுத்தப்பட்டன. பொது இடங்களிலும் சந்தேகத்துக்கிடமான பொதிகள் குறித்துத் தேடுதல் நடத்தப்பட்டது.

மொறட்டுவ பல்கலைக்கழகத்தினுள்ளும் விடுதிக்குள்ளும் நுழைந்த பாதுகாப்புப் படையினர் தேடுதல் நடவடிக்கைகளை மேற்கொண்டனர் என்றும் இரு மாணவர்கள் விசாரணைக்காக அழைத்துச் செல்லப் பட்டனர் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை கட்டுப்பெத்தையில் கிளைமோர்த் தாக்குதல் இடம்பெற்ற இடத்தில் இரவு நாய்கள் வழமைக்கு மாறாகக் குரைத்தன என்றும் - அதிகாலையில் நஞ்சு ஊட்டப்பட்டு ஏழு நாய்கள் உயிரிழந்து காணப் பட்டன என்றும் தெரிவிக்கப்படுகிறது.

(அ-சி)

## பஸ் மீது....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மேற்பட்டவர்கள் களுபோவில வைத்தியசாலையிலும் லுணாவ ஆதார வைத்தியசாலையிலும் சேர்க்கப்பட்டுள்ளனர். இவர்களில் பலர் உடனடியாக சத்திரசிகிச்சைக்கு உட்படுத்தப்பட்டனர். கடும் காயங்களுக்கு உள்ளானவர்கள் கொழும்பு தேசிய வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டனர்.

விடுதலைப் புலிகளே இந்தத் தாக்குதலை நடத்தினர் என்று பாதுகாப்பு அமைச்சு தெரிவித்தது.

ஈவிரக்கமற்ற அமைப்பினால் மேற்கொள்ளப்பட்ட கோழைத்தனமான தாக்குதல் இதுவென இராணுவப் பேச்சாளர் உதயநாணயக்கார தெரிவித்துள்ளார்.

குண்டு வெடிப்புக் காரணமாக பஸ் ஒரு பக்கத்திற்குச் சரிந்ததாக அதில் பயணம் செய்து உயிர் தப்பியவர்கள் தெரிவித்தனர்.

''பஸ்ஸின் நடுப்பகுதியில் நான் நின்றுகொண்டிருந்தேன். பாரிய சத்தத்தின் பின்னர் பஸ் ஒரு பக்கத்துக்குச் சரிந்தது'' - என்று களுபோவில மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ள 21 வயது யுவதி ஒருவர் தெரிவித்தார்.

''கரும்புகை மண்டலம் எழுந்தது. எனக்கு அருகில் பலர் கொல்லப்பட்ட நிலையில் கிடந்தனர்.'' - என்றும் அவர் கூறினார்

பாரிய வெடிப்புச் சத்தத்தின் பின்னர் மக்கள் இரத்தக்காயங்களுடன் அல்லலுறுவதைக் கண்டதாக இந்த பஸ்ஸில் பயணம் செய்த மற்றும் ஒருவர் தெரிவித்தார்.

கொழும்பில் இரு வாரகாலப் பகுதியில் பயணிகளை இலக்குவைத்து நடத்தப்பட்ட மூன்றாவது தாக்குதல் இது என்பது குறிப்பிடத்தக்கது.

புதன்கிழமை தெஹிவளைப் பகுதியில் பயணிகள் ரயில் ஒன்றை இலக்குவைத்து நடத்தப்பட்ட தாக்குதலில் 18 பேர் காயமடைந்தனர்.

மே 26 ஆம் திகதி தெஹிவளையில் ரயிலினுள் இடம்பெற்ற குண்டு வெடிப்பில் 8 பேர் கொல்லப்பட்டனர். (அ-சி)

## மரண அறிவித்தல்

### கார்த்தி பொன்னையா



தாவடியைப் பிறப்பிடமாகவும் கொக்குவிலை வசிப்பிடமாகவும் கொண்ட கார்த்தி பொன்னையா நேற்று முன்தினம் (05.06.2008) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் வள்ளிப்பிள்ளையின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான சின்னத்தங்கச்சி, மயில்வாகனம், மாணிக்கம் மற்றும் தவமணி ஆகியோரின் பாசமிகு சகோதரனும், சின்னராசா காலஞ்சென்ற சின்னக்கிளி ஆகியோரின் பாசமிகு மைத்துனரும், இராஜேஸ்வரி, விஜயகுமார், குசலகுமார், உதயகுமார், நந்தகுமார், சாரதா (சுதா), ஜெயந்தினி ஆகியோரின் அன்புத் தந்தையும் துரைரெட்ணம், மகேஸ்வரி, கமலா, குமுதமலர், கெங்கேஸ்வரி, காலஞ்சென்ற பாலசிங்கம் மற்றும் ஜெயச்சந்திரன், ரேகா ஆகியோரின் அன்பு மாமனாரும், துஷாந்தன், கிருஷாந்தன், குகநந்தினி, றூபாநந்தினி, தீபாநந்தினி, யோகநந்தினி, பிரணவன், பிரசன்னா, சாரு, கம்ஷா, தர்ஷா, தனிஷ்ரா, சானுஜன, றஜீவன், சாலினி, திரிஷா ஆகியோரின் அன்புப் பேரனும் பிரசாந், தமிழினி, ஆகியோரின் அன்புப் பூட்டனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (07.06.2008) சனிக்கிழமை மு.ப 10.30 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கோண்டாவில் கிழக்கு இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

கலைவாணி மில் லேன்,
கொக்குவில் கிழக்கு,
கொக்குவில். TP:0602214403 (சி/553162)

தகவல்:
குடும்பத்தினர்.

SUBRA (14) சித்தங்கேணி
2009 A/L கணக்கீடு
பகுதி I முடிந்துவிட்டது. பகுதி II ஆரம்பம்
ஒரே கட்டணத்தில் இரு ஆசிரியர்கள்
S.S.சீலன் கம்பனி 07.06.2008 மாலை 4.00
கிரயக்கணக்கீடு A.சபேசன் 07.06.2008 காலை 7.00
விசேட சிங்களம்
By: Prof. லீலாகிருஷ்ணன்
புதிய பிரிவு Sat, Sun 8.00-9.00 ஆரம்பம் 07.06.2008
By: யூட்
2009,2010 வகுப்புக்கள் நடைபெறுகின்றன.
A/L வரலாறு ஜெயக்குமார்
2010,2009 வகுப்புக்கள் நடைபெறுகின்றன.

Diploma in Computerized Accounting
(Tally, Accpack, MYOB, QuickPro)
New Speed Batch Start:- 09.06.2008 09.00 AM
324, பலாலி வீதி, யாழ்ப்பாணம்
MCS Supported By UNDP/JRRP

Microsoft Certified Systems Engineer
பரீட்சைகள் யாழ்ப்பாணத்தில்
★ குறுகியகால நிறைவான வகுப்புக்கள்
★ Microsoft நிறுவன அதிபர் Bill Gatesஇன் கையொப்பத்துடன் கூடிய சர்வதேச தர சான்றிதழ்
★ Network Manager, System Admin., System Engineer போன்ற வருமானம் கூடிய வேலைவாய்ப்பு
★ வெளிநாட்டு விசாவிற்கான மேலதிக புள்ளிகள்
புதிய பிரிவுகள் ஆரம்பம் 09.06.2008 07.00 a.m.
மாணவர் விருப்பிற்கு மேலதிக வகுப்பு நேரங்கள்
பதிவு செய்வோருக்கு விசேட சலுகைகள்
விபரங்கள் நேரில்
324, பலாலி வீதி, யாழ்ப்பாணம்
MCS Supported By UNDP/JRRP

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிடெட் நிறுவனத்தினால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 07.06.2008 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org